விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 08 புதன்கிழமை (22.03.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 93

நா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## நோர்வேத் தூதரகத்திற்கு முன் பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேறக்கோரி கொழும்பில் நேற்று தேசிய பிக்கு முன்னணியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கொழும்பு ஹோாட்டன் பிளேஸில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக நேற்று பிற்பகல் நடந்த இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பொற்பதி அலுவலகம் இராணுவத்தினரால் சோதனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நேற்று இராணுவத்தினரால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை அப்பகுதியில் வந்திறங்கிய இராணுவத்தினர் பொற்பதி வீதியூடாகச் சென்றவர்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அரசியல்துறை செயலகத்திற்கு அருகில் உள்ள வீடுகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதேவேளை இராணுவத்தின் கெடுபிடிகள் குறித்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனிடம் மக்கள் தெரிவித்ததையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற கஜேந்திரன் எம்.பியையும் இராணுவத்தினர் மிரட்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ஜிகாத் குழு இயங்குகிறது ஊர்காவல் படைவீரர்கள் தெரிவிப்பு

(திருகோணமலை)

இலங்கையின் கிழக்குப் பகுதியில் ஜிகாத் குழுவினர் இயங்கி வருவது உண்மையே என முஸ்லிம் ஊர்காவல் படையினர் இருவர் நேற்று ஊடகவியலாளர்கள் மாநாட்டில் தகவல் வெளியிட்டுள்ளனர்.

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை உள்நுழைந்த சிறிலங்காப் படையினர் இருவர், தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு முஸ்லிம் ஊர்காவல் படையினரை விடுதலைப்புலிகள் நேற்று ஊடகவியலாளர்கள் முன் முன்னிலைப்படுத்தினர்.

கடந்த 14 ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தினால் புதிய நிபந்தனைகள் அரசியல் போராளிகளின் பயணம் ரத்து

## நிபந்தனைகளை நிறுத்தக்கோரிக்கை

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இன்று அரசியல் பணி மேற்கொள்ளவிருந்த விடுதலைப்புலிகளின் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் பணிக்குச் செல்லும் போராளிகள் மீது அரசினால் புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளமையால் அப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் கண்காணிப்புக்குழுவினரிடம் தெரியப்படுத்தியுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகளின் பகுதி மீது கடற்படையினர் நேற்றும் தாக்குதல்

### 2 போராளிகள் உட்பட 7 பேர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பரப்பிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது நேற்று இரண்டாவது நாளாகவும் கடற்படையினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் இரு போராளிகள் உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று காலை 10 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் தொடர்ந்து துப்பாக்கிப்பிரயோகமும், பீரங்கித்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குடியிருப்புப் பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதனால் இதற்கு மீள்தாக்குதல்களை நடத்துவதாக இல்லை என்கின்ற இக்கட்டான நிலையில் தமது போராளிகள் எதிர்நோக்குவதாக விடுதலைப் புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றம் மீண்டும் ஒப்புதல் அளித்துள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டத்தை ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க முன்வைத்து உரையாற்றினார்.

உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமானதும் அமைதியா (12 ஆம் பக்கம் பார்க்க)

தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் உள்ளே...

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் நிவாரணத்தை மட்டும் எதிர்பார்த்து இருக்கக்கூடாது

எம்.ஸ்ரீபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சமூகம் நிவாரணத்தொகுதியாக மாறிவருவது வேதனைக்குரியதாகும் நிவாரணத்தையே நம்பி யாழ்ப்பாண மக்கள் வாழ்கின்ற நிலையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட மனித உரிமைகளை மேம்படுத்தலும், பாதுகாத்தலுக்குமான சமூக பாதுகாப்புக்குழுவின் தலைவர் எம்.ஸ்ரீபதி சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான மீளக்கட்டியெழுப்பும்செயற்றிட்டத்தின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

பல்வேறுபட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய இக் கூட்டத்தில் தலைவர் எம்.ஸ்ரீபதி தொடர்ந்து உரையாற்றும் போது,

சுனாமியினால் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படும்போது அவை உரியவாறு ஜீவனோபாயச் செயல்பாடுகளுக்குப்பயன்படுத்தப்படுகின்றதா என்பதை நாம் மேற்பார்வை செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் வழங்கப்படும் உதவிகள் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டு விடும்.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிப்படைந்த நிலையிலேயே வாழவேண்டிய நிலை ஏற்படும். எனவே பொது அமைப்புக்கள், தொலைநோக்கு தரிசனம் கொண்ட வகையில் தமது திட்டங்களை வடிவமைத்துச் செயல்படவேண்டும்.

திட்டங்கள் தயாரிப்பதல்ல முக்கியம் தயாரிக்கப்படும் திட்டங்களை நல்ல வகையில் அமுல்படுத்த வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் மனித நேய அமைப்புக்களின் மாவட்ட இணைப்பாளர் இ.பகீரதன், இணையச் செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேல் உட்பட வேறும் பலர் உரையாற்றினர். (க-16)

## கட்சியின் சின்னத்திற்கு கட்டாயம் அடையாளம் இடவேண்டும்

(கொழும்பு)

கட்சி ஒன்றின் சின்னத்திற்கு அடையாளம் இடாமல் விருப்பு வாக்குகளை மாத்திரம் அடையாளம் இடப்பட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாக கருதப்படுமென்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்கும் முறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே தேர்தல்கள் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார். வாக்குச்சீட்டின் மேற்குப் பகுதியில் கட்சிகளினதும், சுயேட்சைக்குழுக்களினதும் பெயர்களும், அவற்றின் சின்னங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சின்னங்களுக்கு அருகில் இருக்கின்ற வெற்றுக்கூட்டில் எதாவது ஒரு சின்னத்திற்கு வாக்காளர் முதலில் அடையாளம் இடவேண்டும்.

வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்படவிருக்கின்ற விருப்பு இலக்கங்களும் அதன் அருகே இரண்டு வெற்றுக்கூடுகளும் காணப்படும்.

முதலில் கட்சியின் அல்லது சுயேட்சைக்குழுவின் சின்னத்திற்கு நேராக புள்ளடி இடவேண்டும். அதன் பின்னர் விருப்பு வாக்குகளை அடையாளம் இடுவதே பொருத்தமானது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (க-9)

## போட்டிப் பரீட்சை

(கோப்பாய்)

இலங்கை அதிபர் சேவை தரம் IIக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-79)

## கற்பித்தல் உபகரணப்போட்டி

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப்பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் இடையேயான கற்பித்தல் உபகரணப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர்சி.சிவஞானசுந்தரம்தலைமையில் நடைபெறவுள்ளது. (து-79)


### சிறு விளம்பரம்

**SPOKEN ENGLISH**

ஓய்வுபெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து எளியமுறையில் குறுகிய காலத்திற்குள் விஷேடமாக வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுக்கொடுக்கப்படும்.

K.சோமசுந்தரம், 6, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு மானிப்பாய். Tel. 021-4591001 (198)

**நோயாளிகளின் கவனத்திற்கு**

உங்கள் வியாதிகள் கண்டுபிடிக்க முடியாதவையா? நாட்பட்டவையா? மாற்றமுடியாது என வைத்தியர்கள் பலர் கைவிரித்து விட்டார்களா?

கவலை வேண்டாம்! எங்களை நாடுகள். ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (மியுசிக் வேர்ல்ட் முன்பாக) (199)


## இலவச கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 156 பேருக்கு இலவச கண்பரிசோதனை செய்யப்பட்டது.

கழகத் தலைவர் லயன் எஸ். சிவபால சுப்பிரமணி யம் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் நடாத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமின் போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் எஸ். எம்.பெர்னாண்டோ நிறுவனத்தினரும் கண். பரிசோதனையை மேற்கொண்டிருந்தனர்.

இதனைத் தவிர அன்றைய தினம் வருகை தந்திருந்த பொது மக்களுக்கு நீரிழிவு பரிசோதனை3 இரத்த அழுத்தப்பரிசோதனை போன்றவற்றினையும் கழகத்தின் மருத்துவக் குழுவினர் மேற்கொண்டிருந்தனர். (க-16)

## 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாகும்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 9 கிராம சேவையாளர்கள் பிரிவில் யூ.என். எச்.சீ. ஆர் நிறுவனம் இவ்வருடம் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை அமுல்செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கொடிகாமம் வடக்கு, கொடி காமம் மத்தி, சங்கத்தானை, மண்டுவில், வரணி வடக்கு, சரசாலை வடக்கு, நுணாவில் கிழக்கு, நுணாவில் மேற்கு, கைதடி நுணாவில் ஆகிய கிராமங்களில் அரை நிரந்தர வீடுகள், தற்காலிக குடியிருப்புக்கள் மலசல கூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் மற்றும் பொது மண்டபங்கள் போன்றவை அமைக்கப் படவுள்ளன.

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த அபிவிருத்தித்திட்டங்கள் அமுல்செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் 75 அரை நிரந்தர வீடுகள், 96 தற்காலிக குடியிருப்புக்கள், 59மலசல கூடங்கள் அமைத்தல், 13 பொதுக் கிணறுகள் புனரமைத்தல் மற்றும் 3 பொது மண்டபங்கள் அமைத்தல் என்பன இடம்பெறும். (க-16)


## இராசி பலன்

**22.03.2006**
**(பங்குனி 8, புதன் கிழமை)**
**ஸப்தமி முற்பகல் 9.10மணிவரை**
**கேட்டை பிற்பகல் 6.33 மணிவரை**
**இராகுகாலம் 12.17-4.47மணிவரை**
**சுபநேரம் 4.47-6.17 மணிவரை**

**மேடம்** அமைதிக்குறைவு, வாகனபயம், காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு.

**இடபம்** கலந்துரையாடல், எடுத்த காரியம்கைகூடும், போசனசுகம், நண்பர்கள் உதவி.

**மிதுனம்** சுகவாழ்வு, திடீர் பயணம், காரிய அனுகூலம், தேசநலன்.

**கடகம்** காரிய இடையூறு, சொத்துப் பிணக்கு, ஆரோக்கியக்குறைவு, வேலைச்சுமை.

**சிங்கம்** அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், சுபசெலவு.

**கன்னி** அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், வாக்குமேன்மை.

**துலாம்** வேலைச்சுமை, முயற்சி தாமதம், வீண் செலவு, வாக்குமேன்மை.

**விருச்சிகம்** ஜனவசியம், நல்லமுயற்சி, நண்பர்கள் உதவி, போசனநன்மை.

**தனுசு** சயனசுகக்குறைவு, சுபசெலவு, உறவினர் வெறுப்பு, வேலைச்சுமை.

**மகரம்** மனமகிழ்ச்சி, நல்லமுயற்சி, தெய்வ சிந்தை, நண்பர்கள் உதவி.

**கும்பம்** சுபநிகழ்ச்சி, தொழில் மேன்மை, பிறர் உதவி, எடுத்த காரியம் கைகூடும்.

**மீனம்** வயிற்றுவலி, சரீரப்பிரயாசை, புதிய முயற்சி, கட்டுப்பாடு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்


## நூல் வெளியீடும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலக கேட்போர் கூட்டத்தில் நூலகர் பகுப்பாக்கம் நுலகர் கைநூல் வெளியீடும் தேசிய வாசிப்பு மாதபொது அறிவுப்போட்டி பரிசளிப்பு வைபவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சி.வி.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல் கலைக்கழக பொருளியல்துறை தலைவர் மு.நித்தியானந்தனும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ர துணை நூலகரும் பிராந்திய இணைப்பாளருமான திருமதி கல்பனா சந்திரசேகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நூலின் முதற் பிரதியை கலாநிதி ஆ.சபாரத்தினம் பெற்றுக்கொண்டார். (க-132)

## மரக்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் மரக்கறிகளின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளமையினால் மரக்கறி உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டம் அடைந்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்கள் இத் தொழிலில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்வது குறித்துச் சிந்தித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரி பொதுச் சந்தையில் ஒருகிலோ வெங்காயம் 30ரூபாவாகவும், ஒருகிலோ தக்காளிப்பழம் 20ரூபாவாகவும், ஒருகிலோ பயிற்றங்காய் 40 ரூபாவாகவும், ஒருகிலோ கத்தரிக்காய் 20ரூபாவாகவும் விற்பனை செய்யப் படுகின்றது.

இதேசமயம், விற்பனைக்கென சந்தைக்குக் கொண்டு வரப்படும் மரக்கறி உற்பத்திப்பொருட்களை வியாபாரிகள் மிகவும் குறைந்த விலையிலேயே கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வகையில் 50 கிலோ கொண்ட தக்காளிப் பழத்தினை வியாபாரிகள் 250ரூபாவுக்கே கொள்வனவு செய்கின்றனர். இதனால் ஒருகிலோ தக்காளிப்பழத்தின் கொள்வனவு விலை 5 ரூபாவாகும்.

இது இவ்விதமிருக்க மரக்கறிச் செடிகளுக்கு நாளொன்றுக்கு மருந்து விசிற ஆயிரம் ரூபா செலவாகின்றது என மரக்கறி உத்பத்தியாளர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-16)





அண்மையில் யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லூநர் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஓய்வுபெற்ற அதிபர். சி.இரத்தினசபாபதி. மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் நிற்பதையும் மாணவர்களின் அணிநடை வகுப்பினையும் படங்களில் காணலாம்.

# கடற்படையினரின் தாக்குதல்; விளக்கம் அளிக்கிறார் எழிலன்

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் கடற்படை தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் விளக்கம் அளித்துள்ளார்.



இது தொடர்பில் சி.எழிலன் கூறியுள்ளதாவது,

கடற்படையினரது இரு டோராப் படகுகள் மற்றும் இரு நீருந்து விசைப்படகுகள் நேற்று முன்தினம் காலை 11.45மணியளவில் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளான சம்பூர் சூடைக்குடா கோணித்தீவு மற்றும் கடற்கரைச்சேனை பகுதிகளில் தாக்குதலை நடத்தின.

கரையை அண்மித்த பகுதிகளிலிருந்தே இந்தத் தாக்குதலை கடற்படையினர் நடத்தினர். 50 கலிபர் துப்பாக்கிகளைக்கொண்டும் மற்றும் பீரங்கிகளைக் கொண்டும் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் பல கட்டடங்கள், வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் அச்சம் காரணமாக மக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறினர்.

பாடசாலைகளிலிருந்த மாணவர்களும் பாதுகாப்பான இடங்களை தேடி ஓடியதை அன்று காணக் கூடியதாக இருந்தது. அன்றைய தினம் பி.ப.1 மணிவரைக்கும் தொடர்ந்து நூற்றுக்கணக்கான 50கலிபர் ரக துப்பாக்கிச் சூடுகளையும் 20க்கும் மேற்பட்ட பீரங்கித் தாக்குதல்களையும் கடற்படையினர் நடத்திக்கொண்டிருந்தனர்.

இவை அனைத்தும் அந்தப் பகுதிகளின் வீடுகளின் மீது விழுந்துள்ளன. சம்பூரைச் சேர்ந்த கணநாதன் தர்சன் என்ற சிறுவன் சிறு காயங்களுக் குள்ளாகியுள்ளான். சம்பூர் மகா வித்தியாலயத்திற்கு பின்புறம் பொதுக் கட்டட வேலையைச் செய்து வந்தவர்கள் மீதும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனாலும் அவர்கள் உயிர் தப்பியுள்ளனர்.

இந்தக் கட்டடத்தை இத்தாலிய நிறுவனம் ஒன்று அமைத்து வருகிறது. இந்த கட்டடப் பணிகளைப் பார்வையிட இத்தாலியிலிருந்து வருகைதந்த பிரதிநிதிகள் அப்பகுதியில் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மண்ணில் படுத்து தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டனர். அவர்களுக்கு அருகிலும் துப்பாக்கி ரவைகள் விழுந்திருந்ததைப் பார்க்க முடிந்தது. இந்நேரத்தில் அன்றைய தினம் காலை முஸ்லிம் பிரதிநிதிகளால் இரு ஊர்க்காவல் படையினர் காணாமல் போனதாக வெளியான செய்தி தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எம்மிடம் ஆலோசனை நடந்த வந்திருந்தனர்.

முஸ்லிம் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு நாம் தகவல் தெரிவிப்பதாகக் கண்காணிப்புக்குழுவிடம் கூறினோம். எம்முடன் ஆலோசனை நடத்திவிட்டு கண்காணிப்புக் குழுவினர் திரும்பிச் செல்லுகையில் இந்தச் சம்பவம் நடந்தது.

உடனடியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்குத் தகவல் தெரிவித்தோம். அதன் பின்னர் சம்பவம் நடந்த இடத்தையும், ரவைகள் விழுந்த இ...ங்களையும், சேதமடைந்த வீ...களையும் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட்டுச் சென்றனர்.

அதே நேரத்தில் இத்தாலிய நிறுவனத்தின் பிரதிநிதிகளும் நேரடியாக கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர். மிக மோசமான யுத்தநிறுத்த மீறலாகத்தான் நாம் இதனை பார்க்கிறோம். எங்கள் பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மிக மோசமாக நடத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கை இது.

மக்கள் மிக அச்சமான நிலையில் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். கடற்படையினரின் இந்தத் தாக்குதலால் மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அண்மையில் மீனவர் சமாசத்தைச் சந்தித்த கடற்படையினர் பகலாக இருந்தாலும் இரவாக இருந்தாலும் தொழில் செய்வதற்கான அனுமதியை தாங்கள் முற்றுமுழுதாக மறுப்பதாக தெரிவித்திருந்தனர். அதே நேரத்தில் சூடைக்குடா பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு மட்டும் பகலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

பகல் நேரத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பகலாக இருந்தாலும் இரவாக இருந்தாலும் மீனவர்கள் மீன் பிடிக்கச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கரையோர பிரதேசங்களில் இப்போதுதான் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் மீள் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் தற்போதைய தாக்குதலினால் மீள்குடியேற்றத் துக்கு வந்தமக்கள்பலமைல் தூரம்வெளியேறி பாதுகாப்பான இடங்களில் குடியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றார். (க)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இதில் தலைவராக சி.மகேஸ்வரதாஸும், செயலாளராக அ.அருந்தவநேசனும், பொருளாளராக அ. அகிலதாஸும் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி நிர்வாக உறுப்பினர்களாக வே.பாலசுப்பிரமணியம், மு.விக்னேஸ்வரன், கா.தர்மரட்ணம், எஸ்.புஸ்பராசா, எஸ்.வேலழகன், திருமதி சா.வாகீசன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-79)

## சான்றிதழ் வழங்கும்

தென்மராட்சி கல்விவலயத்தினால்நடத்தப்பட்ட2005ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்விப் பயிற்சிநெறியில் சித்தியெய்தியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக தென்மராட்சிவலயக் கல்விப்பணிப்பாளர்திருமதிஆ.வேதநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மற்றும் வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கணனி மென்பொருள், ஆங்கில மொழிப் பயிற்சி பெற்றவர்களையும் வரணி மகா வித்தியாலயத்தில் சிகை அலங்காரம், கேக்ஐசிங் பயிற்சி பெற்ற மாணவர்களையும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (க-29)

# சுனாமியால் பாதிப்புற்ற மாணவருக்கு சமூக உளவியல் வகுப்புகள் ஆரம்பம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பகுதியிலுள்ள 5 பாடசாலைகளில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையினர் டென்மார்க் சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடனும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பண உதவியுடனும் தரம் 6, 7, 8, மாணவர்களுக்கு மாலைவேளையில் சமூக உளவியல் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் வாரத்தில் இருநாட்கள் இரு மணி நேரம் வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து நவம்பர் மாதம் வரை இவ் வகுப்புகள் நடாத்தப் படவுள்ளன. இவ்வகுப்புக்கள் மருதங்கேணி கோட்டப்பாடசாலைகளான உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை-சி.சி.த. கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கேவில் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆகிய 5 பாடசாலைகளில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் தலா 5 பேரினை தெரிவுசெய்து இவ் வகுப்புக்களை நடத்துவதற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் ஆசிரியர்களுக்கு இப் பயிற்சி வகுப்பு கொடுப்பனவாக நாளொன்றுக்கு 175ரூபா வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் தரம் 6, 7, 8 மாணவர்களுக்கு பாடசாலையில் 40ரூபாபெறுமதியான மதிய உணவு வழங்கப்படுகின்றதாக கூறப்படுகின்றது.

மேலும் இப்பயிற்சி வகுப்பின் மூலம் சுனாமியினால் பாதிப்புக்குள்ளான மாணவர்களை உளப் பாதிப்பிலிருந்து ஓரளவேனும் மீட்கமுடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. (க-101)

# வெளிநாடுகளில் பணியாற்றுவோர் குறித்து மதிப்பீடு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் நீண்டகாலமாக தொழில் புரிந்துவரும் நபர்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யும் தேசிய வேலைத்திட்ட மொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தேசிய பொருளாதாரத்துக்கு அவர்களது ஒத்துழைப்பை பெறும் பொருட்டு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவிப் பொது முகாமையாளர் எல்.கே.நுகுணுகே தெரிவித்தார்.

இதற்கமைய 10 வருடங்களுக்கு மேல் வெளிநாடுகளில் தொழில் புரிந்து விட்டு, நாடு திரும்பிய நபர்களை இனம் காண்பதற்கும், அவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகுணுகே கூறினார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரட்ணவின் ஆலோசனைக்கமையவே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (க-7)

# அரசியல் யாப்பைத் திருத்த ஜெனீவா கருத்தமைப்பு உதவும்

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

அரசியல் யாப்பின் நாட்டிற்குப் பொருத்தமான திருத்தத்தை ஏற்படுத்துவதில் சமாதானப் பேச்சுக்களின்போது ஏற்பட்ட பொதுவான கருத்தமைப்பு பேருதவி யாக இருக்குமென்று அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

பலதரப்பட்ட இணக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றின் பொதுவான கருத்தமைப்பின் மூலம் இத்தகைய அரசியல் யாப்புத் திருத்தத்தை மேற்கொள்ள முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளைப் பலப்படுத்த வேண்டுமானால், அதில் பங்குபற்றிய அரசாங்கத் தூதுக் குழுவினர் பாரிய பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். (த-7)

## தென்னை மீள் நடுகை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வயல் பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால் மானிய அடிப்படையில் தென்னை மீள் நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


இதன்படி 8 பரப்புக்கு மேற்பட்ட காணிகள் வைத்திருப்பவர்களுக்கு 35 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நல்லூர் கமநல சேவை நிலைய நாற்றுமேடையில் உற்பத்தி செய்து பெற்றப்பட்ட தென்னங்கன்றுகளே இவ்வாறு வழங்கப்படுகின்றன.

தென்னங்கன்றுகள் வழங்கப்பட்ட பயனாளிகளுக்கு உரம் வழக்கவும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. (க-108)

## சிறைச்சாலைக்கான

# அடிக்கல் நாட்டு நிகழ்வில் சட்டவாளர்கள் வெளிநடப்பு





வவுனியாவில் தடுப்புக்காவல் சிறைச்சாலைக்குரிய அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில்கலந்துகொண்ட சட்டவாளர்கள் அனைவரும் இடைநடுவில் வெளியேறினர்.

தமிழரின் நிலப்பரப்பில் சிங்களவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் நிகழ்வாக சிங்களத்தில் வரவேற்புரை மற்றும் பிரித் ஓதலிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதை அவதானித்த சட்டவாளர்கள் இடைநடுவே நிகழ்விலிருந்து வெளியேறினர்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட நீதியாளர் இளஞ்செழியன் உரையாற்றும்போது சிறைச்சாலை கட்டுவதை மகிழ்வாக எண்ண முடியாது. பொலிஸ் நிலையம், இராணுவ முகாம், சிறைக்கூடம் போன்றவை கட்ட என்னால் முன்னிற்க முடியாதுள்ளது.

சிறையில் 53 சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டது. பிந்துனுவெலவில் 25பேர் படுகொலை செய்யப்பட்டது நினைவுக்கு வருகிறது என அவர் தெரிவித்தார். நிகழ்வில் வவுனியா அரச அதிபர் சண்முகம், வவுனியா நீதியாளர் இளஞ்செழியன், பொலிஸ்அதிகாரிகள், இராணுவ அதிகாரி மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர். (க)

## இன்று ஒரு தகவல்

# நியூட்ரினோக்கள்

ஒருவர் கையில் சிக்காமல் தப்பிப்பது ஒரு வகையான சாமர்த்தியம். ஒருவர் கண்ணில் படாமல் தப்பிப்பது அதை விடப் பெரிய சாமர்த்தியம். கண்ணில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பிவிட்டான் சார் என்று சொல்வார்களே அப்படியென்றால் ஒரு கைப்பிடி மண்ணை அள்ளி அவன் கண்ணுக்கு நேராக மண்ணைத்தூவி விட்டுப் போய்விட்டான் என்று அர்த்தமில்லை.

அவ்வளவு சாமர்த்தியமாகத் தப்பித்துவிட்டான் என்று அர்த்தம். தப்பிப்பதற்கு புழுதியை உபயோகிப்பதற்காக நாம் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் புழுதியே நம்மிடமிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறது... அது தெரியுமா புழுதி என்றால் சாதாரண தூசியில்லை. அதுகண்ணுக்குத் தெரியாத நுண்ணிய துகள். அந்தத்துகள் என்ன செய்யும் தெரியுமா? நமது உடலல் ஒரு பக்கம் நுழைந்து மறுபக்கம் தப்பித்து விடும் நமக்கு எதுவும் தெரியாது.

எந்தப் பொருளை தடுப்பாக வைத்தாலும் சரி... ஒரு பெரிய இரும்புத்தடுப்பை வைத்தாலும் சரி... இந்தத் துகள் அதை ஊடுருவிப் போய்விடும். விஞ்ஞானிகள் எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறார்கள். அதைப்பிடித்து விடவேண்டும் என்று இருந்தாலும் அவர்களின் கையில் சிக்காமல் அது தப்பித்துக்கொண்டிருக்கிறது. இது மிகவும் கில்லாடியான ஒரு துகள். இந்தத்துகள்களுக்கு என்ன பெயர் தெரியுமா? நியூட்ரினோக்கள்.

விண்வெளியிலிருந்து இந்த நுண்ணிய துகள் எப்போதும் இங்கே பாய்ந்து வந்து கொண்டுதானிருக்கிறது. விண்வெளியில் இப்படி ஒரு துகள் இருக்கின்றதென்பது ஏற்கனவே விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால் அதைப் பிடிக்க முடியவில்லை. கையில் சிக்கமாட்டேன் என்கிறது. இதை எப்படியாவது பிடித்து விடவேண்டும் என்பதற்காக இந்தியா உள் பட பலநாட்டு நிபுணர்களும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது அந்த நியூட்ரினோக்களை வளைத்துப் பிடிப்பதற்குப் பொருத்தமாக ஒரு சாதனத்தை ஒரு கடலுக்கு அடியில் கொண்டுபோய் வைக்கப்போகிறார்கள். இதற்காக பசுபிக்கடலில் ஹவாய் தீவுகளுக்குப் பக்கத்தில் ஆராய்சசிக்குகூடம் ஒன்று அமைக்கப்போகின்றனர். இந்த ஆராய்ச்சிக்கூடம் கிட்டத்தட்ட அந்த துப்பறியும் வேலையைத் தான் செய்யப் போகிறது.

அது சரி இந்த வேலை ஏன் கடலுக்கு அடியில் நடக்கிறது என்றால் விண்வெளியிலிருந்து வரும் நியூட்ரினோக்கள் நீரின் வழியாகப் பாயும் போது அணுக் கருக்களின் மேல்மோதி மியூவான் மின்னேற்றம் கொண்ட துகள்களை வெளியிடும்படி செய்யுமாம். இந்த மியூவான் தண்ணீர் வழியாகப் போகும் போது போட்டான்களின் மின் காந்த அதிர்ச்சி அலையைத் தோற்றுவிக்குமாம் இது ஆராய்ச்சி கூடக் கருவிகளில் பதிவாகிவிடும் இதன் மூலமாக நியூட்ரினோக்கள் உள்ளதைக் கண்டறியலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

சரி இதை ஏன் கடலுக்கு வெளியே வசதியாக செய்யக் கூடாது என்று கேட்டால் சாதாரண ஒளி விண்ணிலிருந்து வரும் காஸ்மிக் கதிர்கள் இதெல்லாம் போட்டான்களை உண்டாக்கும் இது ஆராய்ச்சிக் கூட கருவிகளில் இடையூறு செய்யக் கூடாதல்லவா? குழப்பமாகிவிடுமே அதனால் நியுட்ரினோ கண்டுபிடிப்பு ஆராய்ச்சிக்கூடம் கடலுக்கு அடியில் உருவாகிறது. நீர் ஒளியையும் காஸ்மிக் கதிர்களையும் தடுத்துவிடும்.

கண்ணுக்குத் தெரியாத துகளைக்கண்டு பிடிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது. பார்த்தீர்களா? அந்த துகளை விட சாமர்த்தியமான திருடர்களெல்லாம் நமது ஊரில் உண்டு. இவர்களைப் பற்றிக்கேள்விப்பட்டால் அந்தத் துகள் வெட்கப்படும் ஒரு பெரிய கும்பல் ஒரு திருடனைத் துரத்திக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிறது திருடன் ! திருடன்! என்று கத்திக்கொண்டே! திருடனைக்கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் தொடர்ந்து ஓடுகிறார்கள். அந்தக் கும்பலில் ஓடிய ஒருவர் ஒரு இடத்தில் அசந்து போய் உட்கார்ந்து விட்டார். மற்றவர்கள் தொடர்ந்து ஓடுகிறார்கள்.

"ஏன் சரர் உட்கார்ந்து விட்டீர்கள்...தொடர்ந்து ஓட முடியவில்லையா உங்களால் ?" என்று கேட்டார் அந்தப் பக்கமாக வந்த ஒருவர்.

"இனிமேல் நான் ஓடவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அந்தக் கும்பல் என்னைத் தான் துரத்திக் கொண்டு அங்கே ஓடிக்கொண்டிருக்கிறது என்றார் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜே.வி.பி. மீண்டும் நோர்வேயை எதிர்ப்பதன் பின்னணி என்ன?

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளிலிருந்துநோர்வே வெளியேற வேண்டும் என்று ஜே.வி.பி மீண்டும் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது.

ஜே.வி.பி யின் இந்த எதிர்ப்பு முழக்கத்தின் பின்னணியாக அக்கட்சியின் உள் முரண் உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மஹிந்தவை வீழ்த்தும் அதிகாரப் போட்டி ஆகியன காரணமாக இருப்பதாக கூறப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் அக்கட்சி இது நாள் வரை கூறிவந்த ஒற்றையாட்சிக் கோட்பாடுகைவிடப்பட்டு வட்டாட்சிக்குள் தீர்வு காணை இறங்கிவந்ததாக செய்திகள் வெளியாகின.

அதன் பின்னணி தொடர்பாக அக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா உள்விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். இச் செய்தி வெளியாவதற்கு ஜே.வி.பி யின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நந்தனகுணதிலக்க காரணமாக இருந்தார் என்று அந்த விசாரணைகளில் தெரியவந்தது. இதையடுத்து தாங்கள் ஒற்றையாட்சிக்கோட்பாட்டில் உறுதியாக இருப்பதாக ஜே.வி.பி தெரிவித்தது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் நெருங்கிய சகாவாக கருதப்படும்நந்தன குணதிலக்க சில மாதங்களுக்கு முன்பாக ஜே.வி.பியை கூட்டாட்சியின் கீழான தீர்வுக்கு தான் இணங்க வைப்பதாக மஹிந்தவிடம் உறுதியளித்திருந்தார்.

நந்தன குணதிலகவும் விமல் வீரவன்சவும் இது தொடர்பில் மஹிந்தவை ஆதரிப்பதாகவும் ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனது கருத்தை ஜே.வி.பி யின் மத்திய குழுக் கூட்டத்திலும் விவாதித்தார் நந்தன குணதிலக்க. ஆனால் அக்கட்சி இதை நிராகரித்தது.

இந்த நிலையில் ஜே.வி.பியின் உள் முரணை வெளிப்படுத்தும் விதமாக ஒற்றையாட்சியை ஜே.வி.பி கைவிட்டதாக செய்தி வெளியானது.

இதையடுத்து கடந்த வாரம் கூடிய ஜே.வி.பியின் மத்தியக் குழு தமது கட்சியின் உள் முரணை மறைக்கும் வகையிலும் எதிர்கால அரசியல் இலாபங்களுக்காகவும் நோர்வே மீதான எதிர்ப்பு பிரச்சாரத்தை மீண்டும் முன் வைக்க முடிவு செய்தது.

நோர்வே மீதான எதிர்ப்பை முன்வைப்பதன் மூலம் மீண்டும் அப்பாவி சிங்கள மக்களின் வாக்குகளை உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுவிட முடியும் என்றும் ஜே.வி.பி கணக்கிட்டு தனது கோரமுகத்தை மீண்டும் வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவதன் மூலம் பிரதான அரசியல் கட்சியாக உருவெடுக்கவும் ஜே.வி.பி திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பிக்கு 39 ஆசனங்களும் சுதந்திரக்கட்சிக்கு 58 ஆசனங்களும் உள்ளன. சுதந்திரக் கட்சியை விட கூடுதல் ஆசனங்களை இனி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெறுவதற்கான யுக்தியாக நோர்வே மீதான எதிர்ப்பை தீவிரப்படுத்தவும் அதற்கான ஆர்ப்பாட்டங்களை நடத்தி பேரினவாதக் காய்ச்சலை தக்கவைக்கவும் ஜே.வி.பி. திட்டமிட்டு வருகிறது.

இதற்காக மஹிந்தவை வீழ்த்தும் வகையில் மஹிந்தவின் அரசாங்கத்தில் உள்ள முக்கிய அமைச்சர்களின் ஊழல்களை வெளியிடவும் மத்திய குழுவில் ஜே.வி.பி தீர்மானித்திருக்கின்றது.


அதேபோல் மஹிந்த ராஜபக்ஷவை தவறாக வழி நடத்தும் நபர்கள் என்று மஹிந்தவின் பொருளாதார ஆலோசகர் அஜித்நிவாட் காப்ரல், சச்சின் வாஸ்குணவர்த்தன ஆகியோரது செயற்பாடுகளை பகிரங்கப்படுத்தவும் ஜே.வி.பி முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் பாரிய நோர்வே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி மஹிந்தவின் அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சியில் ஜே.வி.பி திட்டமிடுகிறது. இதை அறிந்துதான் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உறவை வலுப்படுத்தவும் தேசிய அரசாங்கம் அமைக்கவும் மஹிந்த முயற்சி மேற்கொண்டு வருகிறார் என்று சுதந்திரக்கட்சியினர் தெரிவிக்கின்றனர். (கு)

# சம்பிக்கவின் கருத்தினால் கோபமடையாமல் ஆக்கபூர்வமாகச் சிந்திப்போம்- புலித்தேவன்

(கொழும்பு)

**கொழும்பில்வாழும்4இலட்சம்தமிழர்களின்சவப் பெட்டியை கிளிநொச்சிக்கு அனுப்புவோம் என்று சொன்ன ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்காக நாம் கோபப் படாமல் ஆக்கபூர்வமாகசெயற்படுவோம்என்று விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.**



தமிழீழத்தேசிய தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிய "நிலவரம்" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில், ஜாதிக ஹெல உறுமயவாக இருந்தாலும் சரி அல்லது அதன் கொள்கவகுப்பாளர் சம்பிக்க ரணவக்கவாக இருந்தாலும் சரி இவர்கள் தொடர்ச்சியாக இனவாதக் கருத்துக்களைத் தான் கக்கிக்கொண்டு வருபவர்கள். இனவாதத்தை கக்குவதில் அவர்களுக்குள்ளேயே பெரிய போட்டிநிலவிவருகின்றது. உண்மையாகசிங்களபேரினவாதிகளுக்காகவும் சிங்கள கடும் போக்காளர்களுக்காகவும்குரல்கொடுப்பவர்கள் ஜே.வி.பியா? ஹெல உறுமயவா ? என்கின்ற போட்டி அங்கே நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில்தான் இச் செய்தியும் வெளி வந்திருக்கின்றது.

அத்துடன் சிங்களவர்களின் மன நிலை எவ்வாறு இருக்கின்றது என்ற தெளிவான செய்தியை இது எங்களுக்குக் கூறுகின்றது.

ஹெல உறு மயவினர் தென் பகுதியில் தமிழ் மக்க ளுக்கு இடமில்லை எனக் கூறுகிறார்கள் இதனைத்தான் நாமும் கூறிவருகின்றோம். நாம் கூறி வருவது, என்னவெனில் தமிழ் மக்களுக்கு வடக்கு-கிழக்கில்தான் தமிழீழம் தான் தாயகப் பிரதேசம் ஆகவே தமிழ் மக் களே வடக்கு-கிழக்குக்கு வாருங்கள்! நமது தமிழீழப் பிரதேசத்தில் நாம் நிம் மதியாக , சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வோம்!.

இன்னொரு இனத்திற்கு கீழ் அடிமைப் பட்டுக் கொண்டு அல்லல்பட்டுக்கொண்டு கடந்த 50 வருடங்களாக வாழ்ந்து வருகின்றோம். இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற காலம் வந்துவிட்டது. வடக்கு-கிழக்கில் தற்போது நாம் ஒரு அரசை நடத்தி வருகின்றோம். நமக்கான ஒரு இராணுவம் , கடற்படை, காவல் துறை ஆகியன இருக்கின்றன. சட்ட வாக்கங்களை உருவாக்குகின்ற நீதிமன்றங்கள் இருக்கின்றன.

இதனடிப்படையில் தான் நாம் பேச்சு வார்த்தைக்குச் செல்கின்றோம். தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தி உங்களை நாம் சாகடிப்போம். உங்களை நாம் அழிப்போம் என்பதற்காக சம்பிக்க போன்றவர்கள் இத்தகைய கருத்துக்களை தெரிவிக்கின்றன.

நாம் என்ன கூறுகின்றோம் எனில், தமிழ் மக்கள் இனி அச்சப்படத்தேவையில்லை. நமக்காக நமது தேசியத் தலைவரின் தலைமையில் சிறந்த விடுதலை இயக்கம் இருக்கின்றது. தமிழ் மக்களின் விடுதலைக் காக போராடுகின்ற சிறந்த கட்டமைப்பு இருக்கின்றது. பலம் மிக்க இராணுவம் கடற்படை இருக்கின்றது. நிழல் அரசாக இருப்பதனை உண்மையான அரசாக மாற்றிவிட்டால் சரி.

அதாவது புதிய வேலைத்திட்டங்களை நாம் செய்ய வேண்டும். சம்பிக்கவின் கருத்துக்கள் எங்களுடைய நிலைப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அதனைத் தொடர்ந்து முன்னோக்கி நகர்த்துவதற்குமான செய்திகளாகத்தான் நாம் இதனை காண்கின்றோம். நாம் சம்பிக்க ரணவக்க மீது கோபப்படவேண்டிய அவசியமுமில்லை. அவர்களிடமிருந்து வேறு விதமான பதில்களை எதிர்பார்க்கவும் முடியாது என்றார். (கு)

# உடலில் வயர்களைச் சுற்றி பயணம் செய்த பெண் கைது

(கொழும்பு)

வயர்களைதன் உடலில் சுற்றிக்கொண்டு பேருந்து ஒன்றில் பயணம் செய்த பெண்கைது செய் யப்பட்டார். இச்சம்பவம் புத்தளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தளம் செல்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக இச்சம்பவம் நடந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வனத்தாவிலுவ என்ற இடத்தில் தன் கைகளிலும் கால்களிலும் 2 கிலோ வயர்களைச் சுற்றிய நிலையில் அவர் பயணித்த போது கைது செய்யப் பட்டார்.

இருப்பினும் வனத்தாவிலுவ பொலிஸ் நிலையத்துக்கு வந்த அந்தப்பெண்ணின் கணவர் அப்பெண் மன நிலை சரியில்லாதவர் என்றும் தன் உடலில் வயர்களை சுற்றிக்கொண்டு நினைத்த போக்கில் செல்பவர் என்றும் விளக்கம் அளித்துள்ளார். (கு)

# யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட கோட்டைப்பகுதி, நாவாந்துறை மற்றும் பொம்மைவெளி ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களும் மக்கள் அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் மாலை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்- கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ்.அலுவலகத்தில் சந்தித்து தாங்கள் முகங்கொடுத்து வருகின்ற அடிப்படையானதும், அத்தியாவசியமானதுமான பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற அடிப்படையானதும், அத்தியாவசியமானதுமான குடிநீர் வசதி, மின்சார வசதி, மலசலகூட வசதி, போக்குவரத்து வீதி வசதி மற்றும் வீடமைப்பு வசதிகள் தொடர்பில் இச்சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் இப்பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களுக்கு உடனடியாக குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், போக்குவரத்துக்கான வீதி வசதிகளை சிரமதானங்கள் மூலமும் மாநகரசபையின் உதவியுடனும் மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டதுடன் இப்பகுதிகளில் வாழுகின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் குடிசைகளில் வாழ்ந்து வருவதால் மின்சாரம் வழங்குவதில் சட்டப் பிரச்சினைகள் இருப்பதால் முதற்கட்ட நடவடிக்கையாக முன்பள்ளிக்கூட கட்டடங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் போன்ற சமூக அமைப்புக் கட்டடங்களுக்கு மின்சாரம் பெற்றுக்கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேநேரம் இம்மக்களின் இன்னுமொரு முக்கிய தேவையான வீட்டு வசதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்ட அதேவேளை, இம்மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் தடையாக இருந்துவரும் காணிப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இனங்காணப்பட்டது.

இப்பகுதிகளில் தனியார் துறைக்குச் சொந்தமான கைவிடப்பட்ட நிலையில் நீண்டகாலமாகப் பொதுமக்கள் வசித்து வரும் காணிகளும் மற்றும் இந்தியாவின் சிதம்பரம் கோயிலுக்குச் சொந்தமான காணிகளும் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டதுடன், இந்தியக் கோயிலுக்குச் சொந்தமான காணியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியத் தூதரகத்தின் ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அதேநேரம் தனியாருக்குச் சொந்தமான காணியை அரசாங்கத்தின் மூலம் சுவீகரித்துக்கொண்டு அதன் பின்னர் வீடமைப்புத் திட்டங்களை இப்பகுதிகளில் மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேநேரம் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான காணிகளும் கைவிடப்பட்ட நிலையில் இப்பகுதிகளில் இருந்தபோதிலும் முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் என்ற காரணத்தினால் அக்காணிகளை அம்மக்களிடம் ஒப்படைக்கும்வரை அவற்றைப் பாதுகாத்து வருவது எமது கடமையாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்கள் உட்பட பல்வேறு தரப்பினர் இத்தினங்களில் தொடர்ந்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தாங்கள் முகங்கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருவதால் இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் மேன்மை தங்கிய ஜனாதிபதியின் அவதானத்துக்கு கொண்டு வந்ததன் பிரதிபலனாக ஜனாதிபதியினால் யாழ்.மாநகர அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதியைக் கொண்டு மேற்படி அபிவிருத்திப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்திப்பில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், உதவி அரச அதிபர் பற்றிக் ரஞ்சன், தொழில்நுட்ப அதிகாரி சிவப்பிரகாசம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க)

# இலங்கை போக்குவரத்து சபை நட்டத்தில் இயங்குகின்றது

## பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபை பெரும் நட்டத்தில் இயங்கி வருவதாக அதன் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகள் பழையதாக இருப்பதனாலும் அதிக எண்ணிக்கையான பஸ் வண்டிகளை பாடசாலை சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதனாலும் இத்தகைய நட்டமேற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

52 பாதைகளில் பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற போதிலும் அதிக எண்ணிக்கையான வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு போதிய பஸ் வண்டிகள் இல்லையென்றும் அவர் மேலும் கூறினார்.

ஆரம்பத்தில் மாதமொன்றுக்கு 20 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்ட அதேசமயத்தில் தற்சமயம் 40 இலட்சம் ரூபா நட்டமேற்படுகிறது.

மொத்தம் 76 பஸ் வண்டிகளில் 34 பாடசாலை பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதேவேளை, மத்திய போக்குவரத்துச் சபையினால் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட 12 பஸ் வண்டிகளும் இதுவரை வந்து சேரவில்லையென்றும் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (க-7)

# இடர்காப்பு முகாமைத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இடர்காப்பு முகாமைத்துவம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக பிரத்தியேக இணையத்தளம் வடிவமைக்கப்பட்டு இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக தகவல் வலைப்பின்னல் ஸ்தாபிக்கப்படும்.

இந்த இணையத்தளத்தில் 1974 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையைப் பாதித்த 11ஆயிரம் அனர்த்தங்கள் பற்றிய தகவல்கள் சேர்க்கப்படுமென்று அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

இதன் மூலம் இலங்கையில் கூடுதலான பாதிப்புக்களை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தங்கள் பற்றி அறிவித்து அ ற்றை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே தமது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அனர்த்தங்களின் பாதிப்புக்களைக் குறைப்பது பற்றிய யோசனைகள் அடங்கும் செய்திப் பத்திரிகையொன்றையும் சஞ்சிகையொன்றினையும் வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் அடுத்த மாதம் அமுல்செய்யப்படுமென்று அமைச்சர் கூறினார்.

அதேவேளை, இடர்காப்பு முகாமைத்துவம் என்ற விடயம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பாடசாலைகளில் இடர்காப்பு முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு அனர்த்தங்களால் கூடுதலாகப் பாதிக்கப்படும் 58 பிரதேசங்களைத் தெரிவு செய்து அவற்றில் இயங்கும் 60 பாடசாலைகளில் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. (க-7)

# வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து ஏழு கணித ஆசிரியர்கள் இடமாற்றம்

வடமராட்சி கல்வி வலயத்தில் இருந்து 7 கணித ஆசிரியர்கள் மருதங்கேணி கோட்டத்திற்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி கோட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராயுமுகமாகக் கடந்த வாரம் வடமராட்சி வலய இடமாற்றசபை வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தலைமையில் கூடியபோது, இதுவரைகாலம் வெளிமாவட்டங்களிலும் கஷ்டப்பிரதேச பகுதிகளிலும் சேவையாற்றாதுள்ள ஆசிரியர்களில் 7 கணித ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

இதற்கமைய கஷ்டப்பிரதேச பாடசாலைகளான உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய 7 பாடசாலைகளுக்கும் தலா ஒருவர் வீதம் இந்த ஏழு கணித ஆசிரியர்களும் இடமாற்றப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உடுத்துறை மகாவித்தியாலயத்தில் கடந்த 6 வருடங்களாக சேவையாற்றிய கணித ஆசிரியர் எஸ்.ஜெயமோகன் யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரிக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் இடமாற்றப்படுவதாகவும் அறியப்படுகிறது. (க-101)

## சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மன்றேஸ ஆற்றுப் பகுதியில் மிதந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலமொன்றை பொலிஸார் மீட்டுள்ளார்கள்.

பொதுமக்களின் தகவலை அடுத்து ஆற்றில் மிதந்த இந்த சடலத்தை மீட்ட பொலிஸார் தலையில் சுடப்பட்ட நிலையில் இவரது சடலம் காணப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, கொழும்பு வெள்ளவத்தை நெல்சன் வீதியின் முடிவில் கடற்பகுதியை அண்மித்த இடத்தில் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலத்தை வெள்ளவத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## கூட்டம்

நிலைத்தகு நகர நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான யாழ்.நகர கலந்தாலோசனைக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்தாலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் நகர பக்கப்பார்வை அறிமுகம் செய்யப்பட்டு கலந்தாலோசனை இடம்பெறும்.

இக்கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் நிலைத்தகு வேலைத்திட்ட தேசிய தொழில்நுட்ப ஆலோசகர் டாக்டர் பாமி இஸ்மாயில் கலந்து கொள்வார். (க)

## பனங்கள்ளுக்கு பெரும் கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பனங்கள்ளுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் நவீன விஞ்ஞான முறையில் பனங்கள்ளினை போத்தலில் அடைக்கும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இதன் அடிப்படையில் பனங்கள்ளு உற்பத்தியாளர்களிடம் பனங்கள்ளினைக் கொள்வனவு செய்து உடனுக்குடன் போத்தலில் அடைத்துக் களஞ்சியப்படுத்தி வருகின்றனர்.

இச்சங்கத்தில் தற்போது 25 ஆயிரம் போத்தலுக்கு மேல் பனங்கள்ளு அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள்ளு ஒரு போத்தல் 35 ரூபாவாக சங்க விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாக பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (க-16)

# பாடப்புத்தகங்களை அச்சிடும் பணிகள் யாவும் துரித கதியில்

(கொழும்பு)

இவ்வாண்டுக்குரிய பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடும் பணிகள் துரிதமாக இடம்பெற்றுவருகிறது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்துக்குத் தேவையான புத்தகங்கள் சரியான தருணத்தில் விநியோகிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் பிரகாரம்- பாடப்புத்தக விநியோக நடைமுறைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

கடந்த ஆண்டு பாடப்புத்தகங்களை அச்சிடும் நடைமுறையின் மூலம் சுமார் ஒரு கோடி ரூபா வருமானத்தைப் பெற்றதாக அச்சகக் கூட்டுத்தபானத்தின் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான வருவாய் மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (து-7)

# ஊடகவியலாளர்கள் வெளியேற்றம்?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலவிய பாதுகாப்பற்ற சூழலால் தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவருமே வெளியேறியுள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் நிலைமை சுமுகமாக இருந்தது.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் கருணா குழு உருவான பின்னர் அப்பகுதியில் பதற்றமான சூழல் உருவானது. கொலைகளும் கொலை அச்சுறுத்தல்களும் உருவானது.

ஊடகவியலாளர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையிலேயே செய்திகளை சேகரிக்க வேண்டியிருந்தது.

இதனால் தமிழ் ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு அல்லது வேறு பகுதிகளுக்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழ் ஊடகவியலாளர்கள் அனைவரும் வெளியேறியிருப்பது மட்டக்களப்பு மாவட்டத்தின் செய்திகள் முழுமையாகவும் நம்பகத்தன்மையுடனும் வெளிவருவதில் பாரிய முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளதாக ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கு)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 11 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடம்

**பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.**

01. 

1.பெற்றோல் 2.சக்கரம்
3.சாரதி 4.பணம்


02. 

1.காகம் 2.கோழி
3.குயில் 4.தாரா

**பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

03. 

1.அபாயம் 2.நஞ்சு
3.கவனம் 4.மயானம்

04. 

1.கிளி 2.தூக்கணாங் குருவி
3.பறவை 4.காட்டுக்கோழி

**கோலத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.**

05.

| | | |
|---|---|---|
| 3 | 9 | 8 |
| 7 | 5 | 9 |
| 3 | 9 | |

06.

| | | |
|---|---|---|
| 2 | 4 | |
| 1 | 2 | 3 |
| 0 | 0 | 0 |

**கடந்த புதன்கிழமை வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது அதனை வாசித்து 6-10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

> தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு திறமை வாய்ந்த ஆசிரியரால் வார இறுதி நாட்களில் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
> தொடர்புகளுக்கு
> 7764 260157 021 2226146

07.ஆசிரியருக்கு S.M.S அனுப்பக்கூடிய தொலைபேசி இலக்கம் எது?

------------------------------

08.வார இறுதி நாட்கள் எனக் குறிப்பிடப்படும் இரு நாட்களையும் ஆங்கிலத்தில் எழுதுக?

------------------------------

09.ஆசிரியரால் வகுப்பு எங்கே நடாத்தப்படும்?

------------------------------

10.ஆசிரியரின் நேரடித் தொலைபேசி இலக்கம் என்ன?

------------------------------

11.வலம்புரி தினசரி / வாராந்த பத்திரிகை.

------------------------------

**தரப்பட்டுள்ள சொற்களை நீண்ட ஓசைச் சொல்லாக்கி வசனம் அமைக்குக.**

12.பல் :- ------------------------------

13.அடை:- ------------------------------

**14-18 வரையான வினாக்களுக்கு நாம் பின்பற்ற வேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்று எழுதுக.**

14.சாப்பிட முன் - ------------------------------

15.சாப்பிடும் போது - ------------------------------

16.சாப்பிட்ட பின் - ------------------------------

17.மலசலகூடம் செல்லும்போது - ------------------------------

18.மலம் கழித்த பின் - ------------------------------

**எமது சூழலில் வாழும் பல்வேறு விலங்குகளின் நடத்தைக் கோலங்களை அறிவோம்.**

19. காகம் தனது தலையைச் சரித்துக்கொண்டு பார்ப்பதைக் கண்டிருப்பீர்களே!

அது ஏன்? ------------------------------

20. பூனை மரங்களிலிருந்து கீச்சிடும் அணிலைக் கண்டால் கீழே குந்தியிருந்து அண்ணார்ந்து பார்த்து வாலை ஆட்டிக் கொண்டே கத்துவதைக் கண்டிருப்பீர்கள் தானே

அது ஏன்? ------------------------------

**பிரித்து எழுதப்பட்டுள்ள எண்களைச் சேர்த்து எழுதுக.**

21. 4000 + 500 + 30 + 8 = [ ]

22. 5000 + 200 + 10 + 9 = [ ]

23. ஒரு டசின் பென்சிலின் விலை 42.00 எனின் 7 பென்சில்களின் விலை என்ன?

------------------------------

24.ஒரு மாம்பழத்தின் விலைக்கு இரண்டு கொய்யாப்பழங்கள் வாங்கலாம். ஐந்து கொய்யாப்பழத்தின் விலைக்கு ஒரு அப்பிள் பழம் வாங்கலாம். ஒரு அப்பிள் பழத்தின் விலை 20.00 ஆயின் ஒரு மாம்பழத்தின் விலை என்ன?

------------------------------

25.தாத்தாவும், பாட்டியும் அவர்களது இரு புதல்வர்களும், மருமக்களும் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் இரண்டு பேரப்பிள்ளைகளும் கோயிலுக்குச் சென்றனர். கோயிலுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை என்ன?

------------------------------

**கீழே தரப்பட்டுள்ள கருவிகளின் பெயர்களை எழுதுக.**

26.  ------------------------------

27.  ------------------------------

28.  ------------------------------

29.  ------------------------------


30. 

**சரியான விடையைக் குறிக்கும் எழுத்தில் புள்ளடியிடுக.**

திலக் தனக்கு வேண்டிய பெரிய சோடாப் போத்தலின் அளவைக் காட்டுகிறான்.

(A)Ml (B)Mg (C)L (D)Kg

**கீழேயுள்ள படத்தைப் பார்த்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**



31.படத்தில் இருப்பவர்
(அங்கவீனர் , நோயாளி, ஊனமுற்றவர்)

32.இவர் விற்பனை செய்வது
(கச்சான் பருப்பு , தினப்பத்திரிகை, அதிர்ஷ்டலாபச் சீட்டு )

33. X அடையாளமிட்டது
(ஒலிபெருக்கி , ஒலியெழுப்பும் கருவி, பக்கக் கண்ணாடி)

34.இவ் வண்டியின் சில்லுகளின் எண்ணிக்கை
(இரண்டு , மூன்று, நான்கு )

35.இப்படத்துக்குப் பொருந்தாத பழமொழி ஒன்று
1.அடாது செய்தவர் படாது படுவர்
2.தன் கையே தனக்குதவி
3.முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

**பிழையான விடையின் எழுத்தில் கீறிடுக (வெட்டி விடுக)**

**இங்கே புறொயிலர் விற்பனைக்குண்டு**

36.இதனை இறைச்சிக்காக / முட்டைக்காக வளர்ப்பார்கள்.

37.வெளிநாடுகளில் அண்மைக்காலங்களில் கோழிக் காய்ச்சல் / பறவைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டது.

38.அண்மையில் பல இலட்சம் கோழிகளைக் கொன்ற நாடு இந்தியா / தாய்லாந்து.

39.இவ்விளம்பரங்களை இப்போது வீடுகளிலும் / கடைகளிலும் காணலாம்.

40.இதில் கூடுதலாக அடங்கியுள்ளது புரதம் /கொழுப்பு.

# நிதி நிவாரணம் வழங்கப்பட்டால் பஸ் கட்டணத்தை குறைக்கலாம்

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

தனியார் பஸ் சேவைக்கு நிதி நிவாரணம் வழங்கப்படுமாயின், பஸ் கட்டணத்தை அதிகரிப்பைத் தடுக்க முடியுமென்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

பெறுமதி சேர்வரியைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அந்தச் சங்கம் கேட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை நிதியமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர், நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

எண்ணெயின் விலை 15 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், தனியார் பஸ் சேவையின் செலவீனங்கள் பெருமளவு அதிகரித்துள்ளதாகவும் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜய ரட்ண குறிப்பிட்டார். (க-7)

# எழிலனுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனை மூதூர் பிரதேச பள்ளி வாசல்களின் சம்மேளன பிரதி நிதிகள் நேற்றுமுன்தினம் மதியம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கடந்த வாரம் தோப்பூரில் இருந்து கிளிவெட்டி பகுதி ஊடாக மோட்டர் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு ஊர்காவல் படை வீரர்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (க)

# விண்ணப்பம்கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் முறைசாராக் கல்விப் பிரிவு போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனி மென்பொருள், வன்பொருள், உடையமைத்தல், சிகை-அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய துறைசார் அனுபவம் பெற்றவர்கள் சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பிந்தாமல் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கும்படியும் நேர்முகப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படு மென்றும் கூறப்படுகிறது. (க-29)


## மீள்பார்வை

எதிர்வரும் 28.03.2006 முதல் உங்கள் வலம்புரியில்
தென்னாபிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடி
26 வருடங்கள் சிறைசென்று மீண்ட

## நெல்சன் மண்டேலா

அனைவரும் அறிய வேண்டிய அற்புதத் தொடர்
வாசிக்கத் தவறாதீர்,
வலம்புரியின் மீள்பார்வையில் இதுவரை நீங்கள் அறிந்தவை,

- ◆தேச வழமை
- ◆ஈழத்தமிழர் இறைமை
- ◆இலங்கைப் பாராளுமன்றம்
- ◆சதாம் உசேன்
- ◆சந்தனக் கடத்தல் வீரப்பன்
- ◆கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கர்
- ◆நடிகர் திலகம் சிவாஜி கணேசன்


## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 11

மாணவர் முழுப்பெயர் : ..............................

பாடசாலையின் பெயர் : ..............................

வீட்டின் முகவரி : ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 28.03.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 11
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாகளுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிபபிடவும்.பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.


# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் -9

## அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.சி.கார்த்திக் - யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன்.
02.சி.யதீசன் - யா/இணுவில் மத்திய கல்லூரி.
03.நி.பகீரதன் - யா/து.அ.மி.த.க பாடசாலை துணவி.
04.தி.நிரோஷன் -யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.
05.கு.தட்சிகா - யா/மீசாலை வீரசிங்கம் ம.வி
06.இ.இனோசா - யா/அருணோதயக் கல்லூரி.
07.ஜெ.கபிலானந் - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
08.ஆ.கஜன் - யா/கலாநிதி ஆ.தியாகராசா வித்தியாலயம்.
09.ச.தக்ஷா[illegible]னி - யா/புனித சென்ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
10.த.[illegible]த்மன் - யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.
11.இ.கஸ்தூரி - யா/வதிரி திரு இருதயக் கல்லூரி.
12.ஜெ.தீபிகா - யா/வ.வி.வி
13.ச.மிதுசா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
14.ஆ.தமிழினி - யா/வல்வை அ.மி.த.க. பாடசாலை.
15.சி.பிரணவி - யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
16.யோ.டினோசன் - யா/வல்வை றோ.க.த.க.பாடசாலை.
17.சி.பிரஷாந் - யா/வல்வை அ.மி.த.க.பாடசாலை.
18.ம.பார்த்தீபன் - யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்.
19.கோ.ஆனந்தகிருஷ்ணன் - யா/இந்து ஆரம்ப பாடசாலை.
20.சி.நிஷாந்தினி - யா/வல்வை றோ.க.த.க பாடசாலை.
21.க.ஹரிகரசர்மா - யா/புற்றளை மகா வித்தியாலம்.
22.ச.சுதர்சன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.
23.ஜெ.தானுசா - யா/திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை.
24.க.கீர்த்திகா - யா/சுண்டுக்குளி மகளீர் கல்லூரி.
25.யோ.தர்ஷிகா - யா/அ.மி.த.க. பாடசாலை.
26.ஸ.அபிஷேக் - யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.
27.செ.கிருஸ்ணகுமார் - யா/துணவி அ.மி.த.க பாடசாலை.
28.ப.பகிரேகா - யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## வினாத்தாள் – 09 இன் விடைகள்

01. 2
02. 1
03. 3
04. 4
05. இந்துக்கோவில்
06.தேவாலயம்
07.பள்ளிவாசல்
08. விகாரை
09. 
10. 3
11. 3
12. 3
13. 2
14.3
15. 2
16. 2
17. 1
18. 3
19.எதிரி நாய்களிடம் சரண்
20. பூச்சிக் கடியிலிருந்து பாதுகாப்பு
21. 5706
22. 1789
23. 1050
24. 4945
25. 1933
26. 2
27.3
28. 1
29. 4
30. 2
31. 3
32. 1
33. 2
34. 67,76
35. 380
36. 567
37. 189
38- 40 சூரியன் உதிக்கிறது
பூக்கள் மலர்கின்றன
வண்ணத்துப்பூச்சி பறக்கின்றது

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து சந்திரிகா விலக வேண்டும்

## சகோதரர் அனுரா பண்டாரநாயக்க வலியுறுத்தல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து சந்திரிகா குமாரதுங்க பதவி விலக வேண்டும் என்று அவரது சகோதரரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான அனுரா பண்டாரநாய்க்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அனுரா பண்டாரநாயக்க, சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை மஹிந்த ஏற்கதான் முழுமையாக ஆதரவு தெரிவிப்பதாகக் கூறியுள்ளார்.

கட்சியை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதி மஹிந்தவிடம்தான் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்களிடமும் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்த பின்னர் இந்த விடயம் தொடர்பில் அனுரா பண்டாரநாயக்கவுடன் கலந்துரையாடக் கூடும் என்று தெரிகிறது.

மஹிந்த சிந்தனையைச் செயற்படுத்தாத அமைச்சர்கள் நீக்கப்படக்கூடும் என்ற பட்டியலில் அனுரா பண்டாரநாயக்க இடம்பெற்றிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி உள்ள நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக அவர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

அலையும் மனதை அடக்க, சிந்தனை

தெளிவுபெற ஒழுக்கமான மாணவ சமூகத்தை உருவாக்க

உங்கள் வலம்புரியில்

ஆன்மீகப் பாதை

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும்

ரா.கணபதி எழுதும்

சுவாமி விவேகானந்தர்

அறியாத பல அற்புதங்கள்

அழகு தமிழில் வெளிவருகிறது.

பெற்றோர்களே!, அதிபர்களே!, ஆசிரியப் பெருமக்களே சதா 'மரணச் செய்திகள்' உங்கள் குழந்தைச் செல்வங்களின் மனங்களை வதக்கிவிடுமல்லவா? மாற்றுவழி தேடுங்கள் உங்கள் வீடுகளில் மங்கலம் – அறிவியல் – ஆன்மீகம் தவழ,

வாங்குங்கள் வலம்புரி

வாசியுங்கள் வலம்புரி

## 'மானிடம் வெல்லுமம்மா' இசைத் தட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆழிப்பேரலை அனர்த்தங்களிடையேயும் எழுகின்ற மானிடத்தின் ஆத்ம ராகங்கள் உள்ளிட்ட 'மானிடம் வெல்லுமம்மா' இசைத் தட்டு வெளியீட்டுவிழா இன்று மாலை 3 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா சமூகவியல் சமூகப் பெருந்தலைவர் பேராசிரியர் என்சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக் கழக காபந்துத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸும், யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் வெளியீட்டு இசையை இசையமைப்பாளர் கு.அற்புதன் வழங்க, முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை 'மானிடம் வெல்லுமம்மா' என்ற இசைத் தட்டை வெளியிட்டு வைப்பார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழக ஊடக வள நிலைய இயக்குநர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் திறனாய்வையும், தயாரிப்பாளர் ஜெ.ஜெயராஜ் ஏற்புரையையும் நிகழ்த்தவுள்ளனர். (க-7)

## பயிற்சி

உலக பல்கலைக்கழக கனேடியன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனம் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சியை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் கோப்பாயில் நடத்தவுள்ளது. இப் பயிற்சியில் சேர்ந்துகொள்பவருக்கு பயிற்சிக் காலத்தில் போக்குவரத்து செலவும், வேதனமும், சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன. பயிற்சி முடிவுற்ற காலத்தில் சம்பளமாக 8 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட சர்வோதய இணைத்தலைவர் சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (க-134)

# குறைகேள் அரங்கு

## இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கிளைகளை நிறுவுமா?

மேற்படிக் கூட்டுத்தாபனத்திற்கான அலுவலகம் யாழ்.மாவட்டத்திற்கு யாழ்.நகரில் கூட்டுறவுச் சபை (வீரசிங்கம் மண்டபம்) கட்டடத்தில் மட்டும் இயங்கி வருகின்றது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வேறு பல திணைக்களங்களுக்கு, சபைகளுக்கு, கூட்டுத்தாபனங்கட்கு மற்றும் வங்கிகட்கு பல இடங்களில் சரி சமனான அலுவலகங்கள் அல்லது உப அலுவலகங்கள் உள்ளன. ஆனால் ஏனோ மேற்படித் தாபனத்திற்கு அவை இல்லை.

வேறு பல காப்புறுதி நிறுவனங்கள் இருந்தாலும் பொதுவாக மக்கள் நாடுவது இதைத்தான். தாபனத்தின் செயற்பாடுகள் விரிவானவை. ஏனைய நிறுவனங்கள் எல்லா செயற்பாடுகளிலும் ஈடுபடுவதில்லை. ஆகவே மக்கள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை நாடி வரத்தான் வேண்டும்.

யாழ்.மாவட்டத்தின் தலைநகர் யாழ்ப்பாணமாக இருந்தாலும் இது ஒரு பெரிய பிரதேசம். வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் மற்றும் வலிகாமம் அதிலும் சில உட்பிரிவுகள். ஆகவே அத்தனை பிரதேச மக்களும் யாழ்.நகருக்குத்தான் வரவேண்டியுள்ளது.

ஆகவே ஏனைய நிறுவனங்களைப் போல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் கிளைகளை அமைத்து போதிய சேவைகளை செய்தால் என்ன? மக்களின் பிரயாணத்தால் ஏற்படும் நேர விரயத்தையும், நிதிச் செலவுகளையும், உடல்களைப்பையும் குறைக்கலாமல்லவா? அத்தோடு வேலைவாய்ப்பும் கூடுமல்லவா?

போதிய நிதி சேகரிக்கப்படுகிறது. பொறுப்பாக முகாமையாளர் வருமானத்தைப் பெருக்கி செலவைக் குறைத்து கொழும்பின் நன்மதிப்பை மட்டும் பெற்றுக்கொள்வது நியாயமாகாது.

பணத்தைக் கொடுக்க அலைக்கழிப்பது ஒருபுறம். மறுபுறத்தில் பணத்தைத் தர வருபவர்களை அலைக்கழிப்பது மக்களின் கஷ்டங்களை உணர்ந்து செயற்படுவதன் மூலம், கிளைகளைத் திறப்பதன் மூலம் தாபனத்திற்கு மேலும் மேலும் நிதி கிடைக்கும். விரிவாக்கம் நடைபெறும் போது மேலும் பல அதிகாரிகட்கும், ஊழியர்கட்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். இது போன்ற பல நன்மைகள் நம்மவர்கட்கு கிட்டும்.

அதிகாரிகள் பொறுப்பாக இருந்து உணர்ந்து நல்மனதோடு செயற்படுவார்களா?

வலம்புரியின் குறைகேள் அரங்க முறையீட்டாளர்.

## வைகோ குற்றச்சாட்டு

# ம.தி.மு.க எம்.பி. களை அடகுவைத்து 7 அமைச்சுக்களைப் பெற்றது தி.மு.க

ம.தி.மு.க எம்.பிக்களையும் சேர்த்து கணக்குக் காட்டி மத்திய அமைச்சரவையில் தி.மு.க 7 அமைச்சர்களைப் பெற்றது என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

இதன்மூலம் ம.தி.மு.க எம்.பிக்களை தி.மு.க அடகு வைத்து விட்டது என்ற அவர், இது துரோகம் இல்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தனியார் ரீ.வி ஒன்றுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியது:

எங்களுக்குத் தெரியாமலே எங்கள் எம்.பிக்களை அடமானம் வைத்து மத்திய அமைச்சரவையில் நிறைய இடங்களை தி.மு.க பெற்றுக்கொண்டது.

மக்களவையில் ம.தி.மு.கவுக்கு 4 எம்.பிக்கள் உள்ளனர். ஆரம்பத்தில் மத்திய அமைச்சரவையில் சேருவதில்லை என முடிவு செய்யப்பட்டது. சிறிது காலத்துக்குப் பிறகு அமைச்சரவையில் சேரலாமா என்ற யோசனை முன் வைக்கப்பட்டது.

அதற்காக பிரதமர் மன்மோகன் சிங்கை அணுகியபோது ம.தி.மு.கவுக்கும் சேர்த்துதான் தி.மு.கவுக்கு அமைச்சர் பதவிகள் ஒதுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதையே அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாவும் உறுதி செய்தார்.

தி.மு.கவுக்கு 16 எம்.பிக்கள், ம.தி.மு.கவுக்கு 4 எம்.பிக்கள் என மொத்தம் 20 எம்.பிக்கள் என்று



கூறி 7 அமைச்சர் பதவிகள் தி.மு.கவுக்கு தரப்பட்டுள்ளன.

தி.மு.க கூட்டணியில் இருந்து ம.தி.மு.கவை வெளியேற்ற வேண்டும் என்பதை ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் முடிவு செய்துவிட்டனர்.

அ.தி.மு.கவுடன் ம.தி.மு.க கூட்டணி சேர்ந்திருப்பது சந்தர்ப்பவாதக் கூட்டணி அல்ல. இது இயற்கையான கூட்டணி. இரு கட்சி ளின் தொண்டர்களும் இதனால் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். (து)



புது டில்லியில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் தேசிய முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் ஜஷ்வந்த் சிங், அத்வானி, ஜார்ஜ் பெர்னான்டஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பங்களாதேஷ் பிரதமரின் இந்திய விஜயம்

(புதுடில்லி)

பங்களாதேஷ் பிரதமர் கலிதா ஜியா மூன்று நாள் அரசு முறை பயணமாக நேற்று முன்தினம் டில்லி வந்தார்.

இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து இந்திய தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வங்கதேச பிரதமர் கலிதா ஜியா 2001ஆம் ஆண்டு அந்நாட்டு பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக நேற்று இந்தியா வந்தார்.

அவரை டில்லி விமான நிலையத்தில் வெளியுறவு இணை அமைச்சர் அகமது, வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.





கலிதா ஜியாவின் வருகை குறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வங்கதேசம் இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடு. பேகம் கலிதா ஜியாவின் வருகை இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவை வலுப்படுத்தும்.

அவர் தனது வருகையின் போது பிரதமரைச் சந்தித்து இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது மூன்று நாள் பயணத்தின்போது கலிதா ஜியா இந்திய தலைவர்களைச் சந்தித்து இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது, இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லைப்பிரச்சினை, சட்ட விரோத குடியேற்றம், எல்லை தாண்டிய பயங்கரவாதம் ஆகியவை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இருதரப்பு சந்திப்பின்போது உல்பா தீவிரவாதிகள் வங்கதேசத்தில் முகாம் அமைத்து தீவிரவாத செயல்களை அரங்கேற்றுவதை தடுக்கவேண்டும் என இந்தியா சார்பில் வலியுறுத்தப்படவுள்ளது. (து)

## உலக நீர்வளத்தினம் இன்று கொண்டாடப்படும்

(கொழும்பு)

உலக நீர்வளத்தினம் இன்று கொண்டாடப்படவிருக்கின்றது. இதற்கான தொனிப்பொருள் 'நீரும் கலா சாரமும்' என ஐக்கிய நாடு கள் சபையினால் பிரகடனம் செய்துள் ளது. இதனைமுன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நாடுதளுவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச் சிகளை ஒழுங்குசெய்துள்ளது. பிராந் திய மட்டத்தில் இடம்பெறும் பல நிகழ்ச் சிகளில் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றவிருக்கிறார்கள்.

அமைச்சர் தினேஷ் குணவர்த் தன உட்பட பலர் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்கள். இதன் போது மாணவர்கள் மத்தியில் நடத் தப் பட்ட சித்திரப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங் கப்படும். (த-7)

## முன்பள்ளி திறப்பு

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் தென் மராட்சிதாவளை இயற்றாளையில் அமைக்கப்பட்ட துர்க்கா முன்பள்ளி நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீனிவாசனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழர் புனர் வாழ் வுக்கழகத்தின் நிர்வாக உத்தியோ கத்தர், நிக்கொட் நிறுவன உத்தி யோகத்தர்கள், தென்மராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோக்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## பாலைதீவில் 2000 பக்தர்கள்

(ஊர்காவற்றுறை)

கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடந்து முடிந்த பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் சுமார் இரண்டாயிரத் துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந் து கொண்டதாக தீவக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், குருநகர், ஊர் காவற்றுறை ஆகிய இடங்களிலி ருந்து பல அருட்பணியாளர்கள் இதில் கலந்துகொண்டமை குறிப் பிடத்தக்கது. (க-72)

## பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும்

அகில இலங்கை அரச சேவை சித்தாயுள்வேத வைத்தியச் சங்கத் தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் காலசார மண்டபத்தில் சித்த வைத்திய கலா நிதி செ.பரமசிவம்பிள்ளை தலைமை யில் இடம்பெறவுள்ளது. (த-49)

## விலையேற்றத்தால் விற்பனை வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடந்த 18ஆம் திகதியி லிருந்து ஒரு இறாத்தல் பாணின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக் கப்பட்டதைத் தொடர்ந்து பாண் விற் பனை குறைந்துள்ளது. (த-72)

## பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடங்கள்

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இரு பாலாரிடமிருந்தும் குடா நாடு அளாவிய ரீதியில் பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருத்தமானவர்கள் முழுப்பெயர் ,நிரந்தர முகவரி, தற்போது வசிக் கும் முகவரி (இருப்பின்) , தேசிய அடையாள அட்டை இலக்கம் , பால் , பிறந்த திகதி, கி.சே.பிரிவு, பிரதேச செய்தியாளர் பிரிவு, தனிப்பட்ட வரா, திருமணமானவரா? கல்வித்தகைமை, மேலதிக தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் உறவினர் அல்லாத, தங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இரு வரின் பெயர் விலாசங்களுடன் கூடிய விண்ணப்பங்களை,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 31.03.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச செய்தியாளர் பதவி'' எனத் தவறாது குறிப்பிடவும்.

## பதவி வெற்றிடங்கள்

உதவி ஆசிரியர் (பெண்கள் –பகல்), அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் – பகல்), பாதுகாப்பு உத்தியோகத்தர், பத்திரிகை விநியோகஸ் தர்கள், உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி ஆசிரியர் , அலுவலகச் செய்தியாளர்கள் பதவிக்கு விண்ணப் பிப்பவர்கள் குறைந்த பட்சம் க.பொ.த.(உ/த) பரீட்சையில் தமிழ் மொழி யில் திறமைச் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இத் துறை யில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உடையவர்களாக, அல்லது க.பொ.த.(உ/த) இல் வர்த்தக பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும் . வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங் கள் 31.3.2006 ஆம் திகதிக்குப் பிந்தாமல்,

பிரதம ஆசிரியர் ,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் .

விண்ணபங்களை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலை யில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

# நாட்டை அபிவிருத்தி செய்ய புதிய திட்டம் அமுலாகும்

### பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதியின் வழிகாட்டலுக் கமைய நாட்டை அபிவிருத்தி செய் வது தொடர்பான புதிய திட்டத்தை அரசாங்கம் முன் வைத்துள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை உருவாக்கும் நடைமுறைகளில் தார்மீக விழு மியங்களைப் பேணிப்பாது காப் பது பற்றி கூடுதல் கவனம் செலுத் தப்பட் டிருக்கின்றது.

எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் குறித்த திட்டத்துக்கு கிரா மிய மக்களின் ஆதரவு கிடைக்கு மென தாம் நம்புவதாக பிரதமர் தெரி வித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்த லில் போட்டியிடும் குருநாகல் மாவட்ட வேட்பாளர்களைச் சந்தித்த போது தேர்தல் சட்ட திட்டங்களையும், விதி முறைகளையும் பேணி சட்டத்தை யும் ஒழுங்கையும் கட்டிக்காக்க திட சங்கற்பம் பூணுமாறு அவர் வேண்டு கோள் விடுத்தார்.

அமைச்சர் பிரியதர்சன யாப்ப கருத்துத் தெரிவிக்கையில், நகரங் களுக்கு சமாந்தரமாக கிராமங்க ளையும் அபிவிருத்தி செய்வது அர சாங்கத்தின் முக்கிய நோக்க மெனத் கூறினார். நேற்று முன்தினம் நடை பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்மைத் திரிபாலசிறிசேனவடமத்தியமாகாண முதலமைச்சர் அத்துல விஜய சிங்க ஆகியோரும்கலந்துகொண்டு உரை யாற்றினார் கள். (க-7)

# சமுதாய முன்னேற்றத்துக்கு தடையாகவுள்ள ஆலயங்களில் நிலவுகின்ற முரண்பாடுகள்

### அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.மகேந்தினி

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களில் நிலவு கின்ற முரண்பாடுகள், ஒற்றுமை யின்மைகள் மற்றும் நிர்வாகப் பிரச் சினைகள் சமுதாய முன்னேற் றத்துக்கும் அபிவிருத்திக்கும் பெரும் தடைகளாக விளங்கி வருகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து கலாசாரத்திணைக்களத்தின் அபி விருத்தி உத்தியோகத்தரான திரு மதி எஸ்,மகேந்தினி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்து சமய நிறுவனங்களின் பிரதி நிதிகளுக்கான கூட்டத்தில் உரை யாற்றும் போது தெரிவித்தார்.

தென்மராட்சிபிரதேசத்தில் இயங் குகின்ற இந்து சமய நிறு வனங்க ளின் பிரதிநிதிகள் பங்கு கொண்டி ருந்த இக் கூட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்ந்து உரை யாற்றும் போது,

இன்றைய நிலையில் இந்து ஆலயங்கள் பூசைகள், கிரியைக ளில் மட்டும் கவனம் செலுத்தாது சமுதாய வழிகாட்டல் நடவடிக்கை களிலும்கூடுதலானகவனங்களைச் செலுத்த வேண்டியது மிகவும் அவ சியமாகும். சமூக சேவை இன்று முக் கிய மாகத் தேவைப்படுகின்றது.

சமூக சேவையில் ஈடுபடக் கூடிய இளைஞர், யுவதிகளை நாம் இந்து ஆலயங்கள் ஊடாக வளர்த் தெடுக்க வேண்டும். இப்போதெல் லாம் இளைஞர்கள் ஆலய பணி களில் ஈடுபடுவதில்லை இது பெரும் குறைபாடாக கருதப்படுகின்றது.

இன்றைய சமுதாயச் சீர்கேடு களையும் சமுதாயத் தவறுகளை யும் நாம் எமது அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்கக்கூடாது. எனவே திட்ட மிட்ட வகையில் கிராமிய மட்டப்பணி களில் ஈடுபடவேண்டும்.

இந்து சமய திணைக்களம் மூலம் நாம் இந்து சமய நிறுவனங் கள், அறநெறிப் பாடசாலைகள் மற் றும் ஆலயங்களின் செயற்பாடு களை அபிவிருத்திசெய்யவும் உதவி கள்வழங் கவும் ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். இதற்கு இந்து சம யத்தவர்களின் பூரணமான ஒத்து ழைப்பு அவசியம் .

இந்து ஆலயங்களுக்கு பெரிய உயர்ந்த கோபுரங்களையும் கட்ட டங்களையும் கட்டி விடுவதால் மட் டும் இந்துசமயம் வளர்ச்சி அடைந்து விடாது. மனிதர்கள் மனோ ரீதியாக வும் அறிவுகள் ரீதியாகவும் உயர வேண்டும். எமதுநல்ல எண்ணங் கள் , சிந்தனைகள்,செயல்கள் தான் எம்மை உயர்ச்சிப் பாதையில் இட் டுச் செல்லும்.

இந்து சமயத்தில் இருக்கின்ற இளைஞர்கள், யுவதிகளை சமயம் சார்ந்த வழியில் வழி நடத்திச் செல்ல ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது. இன்று எம்முன் உள்ள முக்கிய கட மையாகும். பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைக்கக்கூடாது எனக் குறிப்பிட்டார் . (க-16)

## இளைஞன் கடத்தப்பட்டான்

(மட்டக்களப்பு)

மட்டகளப்பு வாழைச் சேனை யில் அரச படையுடன் சேர்ந்தியங் கும் துணை இராணுவக் குழுவின ரால் இளைஞன் ஒருவன் கடத் தப் பட்டுள்ளான்.

கடத்தப்பட்ட இளைஞன் தர் மராஜன் (வயது –28) என தெரிய வந்துள் ளது.

அண்மைய நாட்களாக மட்டக் களப்பு மாவட்டத்தில் துணை இரா ணுவக் குழுக்களால் தமிழ் இளை ஞர்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வரு கின்றனர்.

மேலும் வாழைச்சேனை யூனி யன் கொலனிக் கிராமத்தில் புகுந்த துணை இராணுவக் குழுவினர் மக்களின் வீடுகளுக்குள் அத்து மீறி நுழைந்து சோத்னை நடவடிக்கை யில் ஈடுபட்டதுடன் இளைஞர்களை யும் தாக்கியுள்ளனர்.

இதில் சதீஸ் என்ற இளைஞர் படுகாயம் அடைந்துள்ளார்.

இதுதொடர்பாகமாவட்ட அரசியல் துறையினர் யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள் ளனர். (க-4)


அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான
கரப்பந்தாட்ட (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

போட்டி நிபந்தனைகள்:-

01. பங்குபற்றும் அணி பந்து கொண்டுவருதல் வேண்டும்.
02. குறிப்பிட்ட நேரத்துக்கு 15 நிமிடம் முன்னதாக மைதானத்தில் சமுகமளித்திருக்கவேண்டும் . தாமதமாகவரும் அணிக்கு 15 நிமிட அவகாசம் அளிக்கப்படும் அதற்குள் சமுகமளிக்காது விட்டால் எதிரணிக்கு வெற்றி அளிக்கப்படும்.
03. போட்டி சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
04. போட்டிகள் A,B என இரண்டு பிரிவாக லீக் முறையில் நடைபெற்றுஈற்றில் இரண்டு பிரிவிலுமிருந்து புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்ற இவ்விரண்டு கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும். அரை இறுதிப்போட்டி விலகல்முறையில் நடைபெறும்.
05. வெற்றி பெறும் கழகத்திற்கு வெற்றிக்கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படும்.

25.03.2006 :- விண்ணப்ப முடிவு

விண்ணப்பிக்கும் முகவரி-
தலைவர், வீனஸ் வி. கழகம் ஆவரங்கால் கிழக்கு,
மணற்பகுதி, புத்தூர் .
மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைவர்,
செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஊடக அனுசரணை : வலம்புரி–சங்குநாதம்



## தவக்கால சிந்தனை



'எருசலேமே ஆண்டவரை போற்றுவாயாக'

இயேசு இறையரசைக் கட்ட வந்தவர் நற்செய்தியை விதைக்க வந்தவர். இறைவாக்கினர் வழியாக ஏற்கெனவே இறைவன் தொடங்கிநடத்திய மீட்பின் திட்டங்களையெல்லாம் தன்னிலே நிறைவு செய்ய வந்தவர். அவர் பழைய உடன்படிக்கையெல்லாம் புதுப்பித்து புதிய உடன்படிக்கை சமைக்க வந்தவர். கடவுளின் மாபெரும் இறையரசுத் திட்டம் நமது அன்றாட வாழ்வின் சிறிய அனுக்களிலும் நிறைவேறுகிறது என்பதுவே நாம் மனதில் இருத்த வேண்டிய உண்மை.நம் அன்றாடச் சிறிய கடமைகளும் அன்பில் நிறைவேற்றப்படும்போது இயேசுவின் கனவுகள் நம்மில் நிறைவேறுகின்றன. சிறியவற்றை செய்யத்தான் பெரிய இதயமும் பேரன்பும் தேவைப்படுகின்றன. காரணம் இவை பிறரின் கண்களில் பெரிதாகப் படுவதில்லை. பலரது பாராட்டை ஈர்ப்பதில்லை. ஆயினும் இறைவனின் கண்களில் இவற்றை நிறைவேற்றும் அன்பின் மதிப்பிற்கு அளவில்லை! அளவேயில்லை!

காவலன்



ஐக்கிய அரபு குடியரசின் அபுதாபி கடல் பகுதியில் விமானங்களின் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதிவேக விமானங்களுக்கான போட்டியில் அமெரிக்காவின் விமானப்படை விமானம் கடலில் மிதக்கும் இரண்டு பலூன்களுக்கு இடையே நுழைந்து செல்லும் காட்சி...

# அவுஸ்திரேலியாவில் கடும்புயல் 2 இலட்சம் பேர் வெளியேற்றம்

கடந்த சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்காவை காத்ரீனா, ரீட்டா, வில்மா என்ற பல்வேறு பெயர்களில் வந்த புயல் தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இப்போது அவுஸ்திரேலியாவையும் ஒரு புயல் தாக்கி பெரும் சேத்த்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் வட-கிழக்கு கடலோர பகுதிகளை லேரி என்ற இந்த புயல் நேற்றுமுன்தினம் காலை கடுமையாக தாக்கியது. இந்த புயல் காரணமாக கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடல் நீர் கேர்ன்ஸ் இன்னிஸ்பால் மற்றும் கியூன்ஸ்வேண்ட் அருகே உள்ள கிராமங்களில் புகுந்தது.

இந்த பகுதிகள் அனைத்தும் சுற்றுலா மையங்கள், இந்த புயல் அதிக தேசத்தை ஏற்படுத்தும் 4ஆம் நிலை புயல் என்று வானிலை இலாகா ஏற்கனவே எச்சரித்து இருந்தது. கடுமையாக வீசிய புயலில் வீடுகளின் கூரைகள் காற்றில் பறந்தன. ஆயிரக்கணக்கில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. மின்சார கம்பங்கள் சரிந்து விழுந்தன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் புயல் காற்றில் இடிந்தும், வெள்ளத்தில் சிக்கியும் சேதம் அடைந்தன.

மணிக்கு 290 கி.மீ.வேகத்தில் இந்த



புயல் சுழன்று அடித்தது. முன் கூட்டியே வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளை விட்டும், விடுதிகளை விட்டும் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறிவிட்டனர். மீட்பு பணியில் இப்போது அவுஸ்திரேலிய இராணுவத்தின் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (நு)

# 29 நோயாளிகளைக் கொன்ற பாவத்திற்குப் பரிகாரம் தேடும் தாதி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் நகரைச் சேர்ந்த பெண் சார்லஸ் கல்லன் பென்சில்வெனியா மற்றும் நியூஜெர்சி ஆகிய நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் தாதியாக வேலைபார்த்து வந்தார்இவர்.

பணிபுரிந்த காலத்தில் இவர் ஆஸ்பத்திரிக்கு வரும் வயதான நோயாளிகளுக்கு அதிக அளவு மருந்துகளை கொடுத்தும் தவறான மருந்துகளை கொடுத்தும் கொன்று விடுவது வழக்கம்.

29நோயாளிகளை அவர் இப்படிக் கொலைசெய்திருக்கிறார். அவர்கள் கஷ்டப்படுவதைப் பார்க்க சகிக்காமல் இந்த கொலைகளை செய்ததாக கல்லன் தெரிவித்தார்.

29 நோயாளிகளை கொலைசெய்த அந்த தாதியை பொலிஸார் கைதுசெய்தனர். அவர் மீதான 18 கொலை வழக்குகளில் அவருக்கு 18 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறையில் இருக்கும் அவர் இப்போது தனது சிறுநீரகங்களில் ஒன்றை தானம் செய்ய விரும்புகிறார். தான் இதுவரை செய்த பாவங்களுக்கு பரிகாரம் தேடும் வகையில் தனது சிறுநீரகத்தை தானம் செய்ய அவர் முன்வந்திருக்கிறார்.

இதற்காக மருத்துவத்துறை மற்றும் அரசு அதிகாரிகளிடம் அவர் அனுமதி கேட்டு இருக்கிறார். தான் இறந்தபிறகு இதர உறுப்புகளையும் தானம் செய்ய அவர் முன் வந்திருக்கிறார். (நு)

# தொடர்கிறது அமெரிக்கபடை தாக்குதல் 9 பேர் சுட்டுக்கொலை; 7 பேர் கைது!

பக்தாத் அருகே உள்ள துலுயியா என்ற இடத்தில் அமெரிக்காப்படை நடத்திய தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். ஏழுபேரை கைதுசெய்து விசாரணை செய்து வருகின்றனர்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து 90 கி.மீ.தூரத்தில் துலுபியா நகரம் உள்ளது. சன்னி முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ள இந்த நகரில் அமெரிக்க படையினர் நடத்திய தாக்குதலில் கணவன், மனைவி, 13வயது குழந்தை உள்ளிட்ட ஒரு குடும்பத்தினர் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இதில் மூன்று இளைஞர்களும் அடங்குவர் அவர்கள் தீவிரவாதிகளா அப்பாவிப் பொது மக்களா என்பது குறித்து தெரியவில்லை.

இது குறித்த தகவல் எதையும் தெரிவிக்க அமெரிக்கா இராணுவம் மறுத்துவிட்டது. ஆனால் செய்தியாளர் ஒருவர் கூறும்போது துலுலியாவில் இருந்து இரண்டு கி.மீ.தூரம் வரை துப்பாக்கி சத்தம் கேட்டபடி இருந்தது. அமெரிக்கப்படை நடத்திய தாக்குதலில் ஏராளமான வீடுகளும் சேதம் அடைந்தன என்றார்.

இது தவிர தெற்கு ஈராக் நகரான கர்பாலாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மிகப் பெரிய வெடிச்சத்தம் கேட்டது. அந்நகரில் ஆயிரக் கணக்கான சன்னி முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர். ஈராக்கில் இருந்து அமெரிக் கப் படையினர் வெளியேறவும் ஈராக்கில் உள்ள குர்திஷ் தலைமையிலான இடைக் கால அரசை கண்டித்தும் சன்னி முஸ்லிம் அமைப்புகள் போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (நு)

# பொலிஸ்வாகனம் அருகே குண்டுவெடிப்பு 6 பொலிஸார் உட்பட 7 பேர் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பொலிஸ் வாகனம் சென்றபோது சாலை ஓரத்தில் குண்டு வெடித்தது. இதில் 6 பொலிஸார் உள்பட 7 பேர் பலியானார்கள்.

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள நகரம் டெரா இஸ்மாயில் கான். இந்த நகரம் மலைவாசிகள் அதிகமாக வசிக்கும் தெற்கு வசீரிஸ்தான் அருகே அமைந்துள்ளது. இங்கு பொலிஸார் மீது தாக்குதல் அதிகரித்து வருகிறது. அவர்கள் தீவிரவாதிகளால் கடத்தப்படுவதும் அதிகரித்து வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தும் படிபொலிஸார் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் டெரா இஸ்மாயில் கான் நகரில் வழக்கமான ரோந்துப் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். 3 பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களுடன் பொலிஸ் வாகனம் ஒன்று வந்தது. கொட்லி இமாம் என்ற இடத்துக்கு அருகே வாகனம் சென்ற போது சாலை ஓரத்தில் குண்டுவெடித்தது.

இதில் பொலிஸ் இராணுவத்தைச் சேர்ந்த 6 பேர் பலியானார்கள். குண்டு வெடித்த போது அந்த வழியாகச் சென்ற பொது மகன் ஒருவரும் பலியானார். இதில் சிலர் காயம் அடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். இந்தத்தாக்குதல் சம்பவத்துக்கு எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. (நு)

பிலிப்பைன்ஸில் உள்ள சியார்கோ தீவில் பிடிபட்ட ஒரு பெரிய மீனை உற்று நோக்குகிறான் ஒரு சிறுவன்...



ஜப்பானில் யோகோஹாமா நகரில் நடந்த திமிங்கில ஷோவில், திமிங்கிலம் தூக்கி எறிந்ததில் மேலே போய் விழும் பயிற்சியாளர்...



# சதாம் உசேனை பதவி நீக்கும் எனது முடிவு சரியானதே!

## அமெரிக்க ஜனாதிபதி தெரிவிப்பு

(அமெரிக்கா)

சதாம் உசேனை ஈராக்கின் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்குவதென தான் எடுத்த முடிவு சரியானதென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் சில பிரதேசங்களில் வன்செயல்களும் கடும் மோதல்களும் இடம் பெற்று வருகின்ற போதிலும் பெரும்பாலன பிரதேசங்களில் வன் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஒக்கியோவில் விசேட உரையாற்றும்போதே அமெரிக்க ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு இடம்பெற்று கடந்த திங்கட்கிழமையுடன் 3 வருடங்கள் பூர்த்தியடைந்து விட்டது.

ஈராக்கில் நிலையான அமைதி ஏற்படும்வரை அமெரிக்க இராணுவத்தை அங்கிருந்து வாபஸ் பெறப்போவதில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நு)

படிப்புக்கள் அனைத்திலும் அதி உன்னத மான படிப்பு மனிதன் எப்படியிருக்க வேண் டும், எதைத் தேட வேண்டும் என்ற படிப்புத் தான். -பிளேட்டோ

வலம்புரி

# வேலை நிறுத்தம் செய்வதை யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் தவிர்க்க வேண்டும்

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை முன்னெ டுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப் பதாக தெரியவருகின்றது.

'பதவி நியமனங்கள்' என்ற பிரச்சினை யை முன்வைத்து யாழ்.பல்கலைக்கழக ஊழி யர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக் கலாம் என்ற அச்சம் பெற்றோர் மத்தியில் எழுந்துள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நிலவிய அசா தாரண சூழ்நிலையில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினால் யாழ்.பல் கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

எனினும் ஜெனீவாவில் இடம்பெற்ற அரசு - புலிகள் பேச்சுவார்த்தையை அடுத்து பகிஷ் கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் அதனை நிறுத்தி விரிவுரைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மாணவர்கள் நீண்ட நாட்களாகப் பகிஷ்க ரிப்பில் ஈடுபட்ட பின்னர், மீண்டும் விரிவுரை களுக்குத் திரும்பியுள்ள நிலையில்;

யாழ்.பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித் தால் தமது பிள்ளைகளின் கல்விச் செயற் பாடு என்னவாகும் என்ற ஏக்கம் பெற்றோர் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாண வர்களைப் பொறுத்தவரை அவர்கள் வேலை செய்யும் வயதிலான பிரிவுக்குள் இடம்பெறக் கூடியவர்கள்.

எனவே வேலை செய்ய வேண்டிய வயத மைப்பில் இருந்து கொண்டு, பல்கலைக்கழ கத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது கல் விச் செயற்பாட்டிற்காக ஏதோவொரு வேலை யை - அதனூடாகக் கிடைக்கக் கூடிய வருமா னத்தையிழந்துள்ளனர்.

ஆக,வருமானம் தேடக் கூடிய பிள்ளைகள் படித்துக் கொண்டிருப்பது பெற்றோருக்குச் சுமை என்பது உணரப்பட வேண்டிய விடயம்.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள் உரிய காலத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்ய வேண்டியவர்களாகவிருக்கின்றனர்.

பகிஷ்கரிப்பால் ஏற்பட்ட காலதாமதத்தை ஒரளவுக்கேனும் விரைவுபடுத்த வேண்டுமா யின் அதற்கு அனைத்துப் பிரிவினரதும் ஒத் துழைப்புத் தேவையாகும்.

எனவே பல்கலைக்கழக கல்வி சாரா ஊழி யர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதி க்க நேரிட்டாலும் நிலைமையை உணர்ந்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை தவிர்க்க வேண்டும்.

# போலிக் கச்சேரி நடத்தியவருக்கு 36 மாத கால கடூழியச் சிறை!

(யாழ்ப்பாணம்)

கடந்த 2004ஆம் ஆண்டு அரியாலை, புங்கங்குளம் பகுதியில் போலிக் கச்சேரி நடத்தியதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட குற்ற வாளிக்கு மூன்றரை வருட கடூழிய சிறைத்தண்டனையும் 25ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.விக்னராஜா தீர்ப்பளித்துள்ளார்.

அரியாலை புங்கங்குளம் பகுதியில் மினிக்கச்சேரி ஒன்றை நடத்தி வந்தமை தொடர்பில் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22ஆம் திகதி இரு நபர்கள் யாழ். பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு பொதுமக்களை ஏமாற்றிய குற்றத் திற்காக அவர்களுக்கெதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது. இதேவேளை, வழக்கின் எதிரிகளில் ஒருவர் அரச சாட்சியாக மாறி மினிக்கச்சேரி சம்பந்தமான தகவல்களை வழங்கியதன் பிரகாரம் அவருக்கெதிரான வழக்கு தள்ளுபடியானது.

மற்றைய நபருக்கெதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றவாளி யான மற்றைய நபர் திருட்டுத்தனமாக போலி ஆவணங் களை தயாரித்தமை, அழைப்புக்கட்டளைகள், பிறப்பு அத் தாட்சிப் பத்திரங்களை போலியாக தயாரித்தமை, பொய் யான பெறுமதியில் காணி உடமை மாற்றம் செய்தமை, உயர் அதிகாரிகளின் இறப்பர் முத்திரைகளை வைத்திருந்தமை போன்ற 5 குற்றங்களை புரிந்துள்ளமை நிரூபிக்கப்பட்டது.

இதனால் குறித்த நபருக்கு ஐந்து குற்றங்களுக்கெதிராக 15 வருட சிறைத்தண்டனையை 3வருட கடூழிய சிறைத் தண்டனை யாகவும் 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தும் படியும் நீதவான் உத்தரவிட்டார். அவ்வாறு தண்டப்பணம் செலுத்தத் தவறின் மேலும் 30 மாதங்கள் சிறைத்தண்டனையை அனு பவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் 3ஆண்டு களுக்கான கடூழிய சிறைத்தண்டனையை இவர் கைதான காலத்திலிருந்து கணக்கிடுமாறும் நீதிபதி கூறினார். (சு-132, 133)

# பஸ்ஸை வழிமறித்து நகை,பணம் கொள்ளை

## ஆயுததாரிகள் கைவரிசை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பஸ்ஸை அநுராதபுரம் சிம்மாவத்தை என்னுமிடத்தில் வழிமறித்த ஆயுத தாரிகள் சிலர் பயணிகளிடமிருந்து நகை, பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியு டைய நகைகளும் பணமும் இவ்வாறு ஆயுத முனையில் கொள் ளையிடப்பட்டுள்ளது. கொள்ளையர்கள் ஒரு சில பயணி களின் செல்லிடத் தொலை பேசிகளையும் பறித்துச் சென் றுள்ளனர்.

கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் இடைப்பட்ட பகு தியில் இருந்து பஸ்ஸில் ஏறிய இருவருக்கும் இக்கொள் ளைச் சம்பவத்துக்கும் தொடர்பு இருப்பதாக ஆரம்ப கட் ட பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அநுராதபுரத்திற்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட சிம் மாவத்தை பகுதியில் பஸ்ஸை வழிமறித்த நான்கு பேரு டன், பஸ்ஸில் பயணித்த மேற்படி இருவரும் இணைந்து கொண்டே ஆயுதங்களைக் காட்டி நகைகளையும் பணத் தையும் செல்லிடத்தொலை பேசிகளையும் கொள்ளை யடித் ததாக பயணிகள் பொலிஸாரிடம் முறைப்பாடுசெய்துள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பஸ்ஸில் பயணித்தவர்களில் அநேகர் யாழ்ப்பாணம் செல்லவிருந்த பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த அநுராதபுரம் பொலிஸ் நிலைய பிரதான பொறுப்பதிகாரி சரத் பிரேம மேல திக விசாரணைகள் தொடர்வதாகவும் கூறினார். (சு-7)

# 1.10 கோடி ரூபா செலவில் மாவீரர் மைதானம் அமைப்பு

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புதுக் குடியி ருப்பு பரந்தன் வீதியில் 1.10 கோடி ரூபா செலவில் அமைக்கப் பட்ட மாவீரர் விளையாட்டு மைதான திறப்பு விழா கடந்த ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது.

பிரதேச சபைச் செயலகம், நூலகம், சிறுவர் பூங்கா ஆகிய வையும் அன்றைய தினத்தில் திறந்து வைக்கப்பட்டன. ஒரே தட வையில் ஐந்து போட்டிகள் நடத்தக் கூடிய அளவிற்கு மாவீரர் மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைச் செயலர் ஜேசு தாசன் தலைமையில் மைதான திறப்பு விழா நடை பெற்றது.

பொதுச்சுடரினை புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் முதல் வீரச்சாவடைந்த மாவீரர் எட்வினின் தாயார் திருமதி இரத்தின சபாபதி ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா ஏற்றினார்.

அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு சுடரினை பிரதேச செய லர் செ. தயானந்தா ஏற்ற மலர் மாலையினை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் அணிவித்தார்.

மைதானத்திற்கான பெயர்ப் பலகையினை தமிழீழ விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா திரைநீக்கம் செய்தார். விளையாட்டு மைதானத்தினை விளையாட்டுத்துறையைச் சேர்ந்த எதிர்வீரசிங்கம் திறந்து வைத்தார்.

பிரதேச சபை செயலகத்தின் பெயர்ப்பலகையினை கரைத் துறைப்பற்று விசேட ஆணையாளர் கி.கிருஷ்ணபிள்ளை திரைநீக் கம் செய்தார். கட்டடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் சதாசி வம் கனகரத்தினம் நாடாவை வெட்டி திறந்துவைத்தார். நூலகத் தினை தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா நாடாவை வெட்டி திறந்து வைத்தார். சிறுவர் பூங்காவினை முல்லைத்தீவு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச. நாகரத்தினம் திறந்து வைத் தார். துடுப்பாட்ட மைதானத்தினை வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் வே. சிவனடியார் திறந்து வைத் தார்.

இந்து மதகுரு இராமசுவாமி ஆசியுரையினை நிகழ்த்த கிராம அலுவலர் கனகசுந்தரசுவாமி, பிரதேச செயலர் செ.தயானந்தா, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா ஆகி யோர் கருத்துரைகளை வழங்கினர்.

தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா சிறப் புரை நிகழ்த்தினார். திறப்பு விழாவிற்கு பின்னர் 5 விளை யாட்டுப் போட் டிகள் இம் மாவீரர் மைதானத்தில் நடத்தப் பட்டன. (கு)

# எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கமாட்டோம்! ஊதிய மீளாய்வு தொழிற்சங்கக் குழு!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எந்த அரசியல் கட் சிக் கும் வாக்களிக்கப் போவதில்லையென அரசாங்க ஊழி யர்களின் ஊதிய மீளாய்வுத் தொழிற்சங்கக் குழு தெரிவித் திருக்கிறது.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க எந்த அரசியல் கட்சியும் முன்வரவில்லையென்பதாலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக குழு உறுப்பினர்கள் தெரி வித்தனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் அரசாங்க ஊழியர்களும், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும் வாக்களிப்பதை பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பதாக குழு வின் உறுப்பினர்களில் ஒருவரான சமன் ரட்ணப் பிரிய கூறியிருக்கிறார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் விளை வாக திஸ்ஸ தேவேந்திர ஊதியக்குழு நீக்கப்பட்டு புதிய குழு வொன்று நியமிக்கப்பட்டுள் ளது.

புதிய குழுவின் யோசனைகள் கிடைக்கும் வரை 3ஆயிரம் ரூபா இடைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறு தொழிற் சங் கக் குழு அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருப்பதாகவும் அவர் கூறி னார்.

ஊதிய அதிகரிப்பில் காணப்படும் முரண்பாடுகளை அரசாங் கத்துக்கு தெளிவுபடுத்தாது வாக்குகளை மாத்திரம் அரசியல் கட் சிகள் கோருவது வருத்தத்துக்குரியது எனவும் அவர் மேலும் குறிப் பிட்டார். (க-7)

# 119 தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக் கல் செய்யும் நடவடிக்கை முடிவடைந்த நாள் முதல், இது வரை 119 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக தேர் தல்வன் முறைகள் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரி வித்துள்ளது.

இந்தச் சம்பவங்களில் 46 சம்பவங்கள் பாரதூரமான வையெனகுறிப்பிடப்பட்டுள்ளது. 27 தாக்குதல்சம்பவங்களும், காயங்கள் ஏற்படுத்தக் கூடிய 8 சம்பவங்களும் இடம் பெற் றுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதலான தேர்தல் வன்முறைகள் அநுராதபுர மாவட் டத்திலேயே இடம்பெற்றுள்ளன . அநுராதபுர மாவட்டத் தில் 19 தேர் தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் 11 தேர்தல் வன்முறைகளும், நுவரெலியா வில் 8 வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன. (சு-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



மனிதன் தவறான வழியில் செல்லும் போது மன அமைதியை இழந்து விடுகிறான். எந்த அள வுக்கு ஒருவன் தவறான சிந்தனைகளைக் கொண் டிருக்கிறானோ அந்த அளவுக்கு அவன்மன அமைதி இல்லாதவனாக இருப்பான். இதற்கு மாறாக எந்த அளவுக்கு ஒருவன் உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டிருக்கிறானோ அந்த அளவுக்கு அவன்மன அமைதி பெறுவான்.

சுவாமி விவேகானந்தர்

# துணைவேந்தர் இன்றி இயங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மாணவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தினை சரியாகப் புரிந்து கொண்டு எமது பல்கலைக்கழகத்தினை சரி யான வகையில் வழிநடத்தக் கூடிய ஒரு துணைவேந்தரை உடனடியாக நியமிக்கு மாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது துணைவேந்தராகக் கடமை யாற்றிய பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர் களுடைய பதவிக்காலம் முடிபடைந்துள்ள நிலையில் அவர் மீண்டும் ஒரு வாரம் பதில் துணைவேந்தராகக் கடமையாற்றி அப் பத விக் காலமும் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது துணைவேந்தர் இல்லாத நிலையில் பல்கலைக்கழகம் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மாணவர்கள் விரும் பாத ஒருவரை துணை வேந்தராக நியமித்து குழப்பத்தை ஏற்படுத்தி எமது மாணவர்களி னது கல்வி நடவடிக்கையினை குழப்ப வேண் டும் என்ற கபட நோக் கத்திற்காக இப் பிரச்சி னைக்கு உரிய தீர்வை வழங்காது ஜனாதிபதி இழுத்தடித்துச் செல் வதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே எமக்குப் பொருத்தமான ஒரு துணைவேந்தரை உடனடியாக நியமித்து எமது கல்வி செயற்பாட்டினை நாம் குழப்ப மில்லாது மேற்கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### சப்புரகமுவ பல்கலைக்கழக மாணவி கடத்தப்பட்டார்

கல்முனைப் பிரதேசத்தினைச் சேர்ந்த சமூக விஞ்ஞானப் பீட மாணவி ஒருவர் நேற்று இனந்தெரியாதவர்களினால் கடத்தி செல்லப்பட்டுள்ளதாக கமநலவெள பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சப்புரகமுவ பல்கலைக்கழகத்தின் மாண வியான இவர் பரீட்சை எழுதி விட்டு விடுதி நோக்கித்திரும்பிக் கொண்டிருக்கையில் இக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளை நிற வாகனத்தில் வந்தவர்கள் அம் மாணவியைக் கடத்தி சென்றுள்ளதாக அவருடன் சென்ற இரு மாணவிகள் பொலி ஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இது தொடர்பாக இரத்தினபுரி பிரதேசத் தில் திடீர் சோதனைச் சாவடியை அமைத்து சந் தேகத்திற்கிடமான வாகனங்களை பொலி ஸார் சோதனையிட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டது. (ச)

# பதில் துணைவேந்தரை நியமிக்குமாறு முன்னாள் துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்குப் பதில் துணைவேந்தர் ஒருவரை நியமிக்குமாறு தற்போதைய பதில் துணைவேந்தர் பேராசிரி யர் சு.மோகனதாஸ் கல்வி அமைச்சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் நியமிக்கப்பட்டிருந்தார். அவரது நியமனத் திற்குப் பல்கலைக்கழக மாணவ சமூகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

இதனால் புதிய துணைவேந்தர் கடந்த மார்ச் 15 ஆம் திகதி பதவியேற்கவில்லை. இந் நிலையில் பதில் துணைவேந்தராகப் பதவியேற்குமாறு பேராசிரியர் சு.மோகன தாஸை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அவர் பதில் துணை வேந்தராகப் பணியாற்றி வந்தார். இந் நிலையில் அவருடைய பதில் துணைவேந் தர்ப் பதவிக்குரிய சேவைக் காலமும் கடந்த திங்கட்கிழமையுடன் முடிபடைந்தது.

இதையடுத்துத் தாம் ஓய்வு பெறவுள்ள தால் பணியைப் பொறுப்பேற்பதற்கு வசதி யாக வேறொருவரை பதில் துணைவேந்த ராக நியமிக்குமாறு கோரி பேராசிரியர் மோ கனதாஸ் கல்வி அமைச்சைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ச)

# ஊடகத்துறை டிப்ளோமா கற்கைநெறி இன்றுஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இன்று காலை 9.00மணிக்கு பத்திரிகையியல் டிப் ளோமா முழுநேரக் கற்கை நெறி ஆரம்பமா கவுள்ளது.

இல.84, ஜும்மா மொஸ்க் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடகவளங் களீ பயிற்சி மையத்தின் விரிவுரை மண்டபத் தில்,

கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச் சந்திரன் தலைமையில் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் வரவேற்புரையை, பயிற்சி மையத் தின் பணிப்பாளர் பேராசிரியர் அ. சண்முக தாஸ் நிகழ்த்துவார்.

ஆசியுரைகளை நல்லை ஆதீனமுதல் வரும், யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே. நிக்கலஸூம்,மொகிடீன் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி ஏ.ஜி. எம். இர்பனும் நிகழ்த்துவார்கள். சிறப்புரையை டனிஷ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன ஊடக ஆலோ சகர் கலாநிதி ஹென்றிக் குறுநெற் நிகழ்த் துவார்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணத்திலி ருந்து வெளிவரும் பத்திரிகைகளின் பிரதிநிதி கள் வழங்குவர் (து)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள் ளைகளின் தந்தையான சித்திரவேல்(வயது-36) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவரா வார். இவரது சடலம் ஏறாவூர் வைத்திய சாலை யில் வைக்கப்பட்டுள்ளது. (ச-4)

## கிழக்கில்...

திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்த ஊர்காவல் படைவீரர்களான வாழைச்சேனையைச் சேர்ந்த சித்திக்ரிசீன் (வயது 23) மற்றும் தோப்பூரைச் சேர்ந்த அனிபா அன்சார் (வயது30) ஆகிய இருவ ரும் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட னர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இவர் கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு திக்குள் நுழைந்ததால் இவர்கள் தற்போது தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

தமிழீழ நீதிமன்றம் ஊடாக வழமையான நடைமுறையின்படி இவர்கள் விடுவிக்கப் படுவர் என விடுதலைப்புலிகள் தெரிவித் துள்ளனர். இதேவேளை ஊடகவியலாளர் களிடம் கருத்துத் தெரிவித்த அவர்கள் ஜிதாத் குழுவின் பொறுப்பாளர்கள் அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றையும் வெளிப்படுத்தியுள்ளனர். (ச-4.5)

## திருமலையில்...

திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருப்பதாலும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுவருவதால் இதற்கான மீள்தாக்குத லினை நடாத்தாமல் போராளிகள் பொறுமை காத்துவருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க விபரிக்கையில், நேற்று கடற்படைப் படகுகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தங்களை நோக்கி வந்த இரண்டு படகுகளை அவர்கள் மறிக்க முற்பட்டபோது அதிலிருந்து துப்பாக்கிப்பிர யோகம் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரும் எதிர்த்தாக்குதலினை நடாத்தினர். இதனையடுத்து இப் படகுகள் ஓடி மறைந்தது. நேற்று முன்தினம் கூட கடற்படை படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டது.இதற்கு கடற்படையினர் பதில் நடவடிக்கை எடுத்துள் ளனர். (ச-4)

## புலிகளின்...

போராளிகள் தமது பணிகளை மேற் கொள் வதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகை தரவிருந்த நேரத்தில் இராணுவத்தினர் இந் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-132,133,05)

# கொள்ளையர்கள் சூட்டில் பொதுமக்கள் மூவர் படுகாயம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா பண்டாரிக்குளம் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் கொள் ளையர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

பண்டாரிக்குளம் பிரதேசத்தில் வீடு ஒன் றில் கொள்ளையிட நான்கு பேர் கொண்ட குழு முயற்சித்தபோது அந்தக் குழுவை மடக்கிப் பிடிக்க பிரதேசவாசிகள் முற்பட்டுள் ளனர். அப்போது பிரதேச வாசிகள்மீது கொள் ளையர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திய தாக பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொ லிஸ்மா அதிபர் காமினி டி சில்வா தெரி வித்தார்.

இதனால் மூன்றுபேர் காயமடைந்துள்ள னர் என்றும் அவர்கள் மூவரும் வவுனியா மருத் துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்துக் கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். (ச)

## நோர்வேத்...

ஆர்ப்பாட்டத்திற்கு தாம்பர அமில தேரர் தலைமை வகித்தார்.

அரை மணி நேரம் நடைபெற்ற இவ்வார்ப் பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பிக்குகள் பங்கேற்றனர். விடுதலைப்புலிகளுக்கு தனி அரசைப் பெற்றுத்தர நோர்வே முயற்சிப்ப தாக தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் கோஷங் கள் எழுப்பப்பட்டன.

இதேவேளை நோர்வேத் தூதுவர் ஹான் பிரட்ஸ்கர் மற்றும் நோர்வே சர்வதேச அபி விருத்தி அமைச்சரும் சமாதானத்தூதுவரு மான எரிக்சொல் ஹெய்ம் ஆகியோருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.(ச)

## அவசரகாலச்...

னதுமாக நடத்துவதற்கு அனைத்துப் பிரிவு களுக்கும் அரச தலைவர் மகிந்த ஆலோ சனை வழங்கியுள்ளார்.பேச்சுவார்த்தைக ளின் பின்னர் படுகொலைச் சம்பவங்கள் குறிப் பிடத்தக்களவு குறைந்துள்ளன.

விடுதலைப்புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது காணப்பட்ட இணக்கப்பாட்டின் பின்னர் படுகொலைச் சம்பவங்கள் குறைவடைந்த போதிலும் கடந்த காலங்களில் 10 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

9 கொலை முயற்சிகளும் நடைபெற்றுள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன என்றார் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

சட்டத்தையும் அமைதியையும் அரசாங்க உடைமைகளையும் பாதுகாப்பதற்கு அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான அவசியம் நிலவுவதாக ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஏதும் இன்றி இந்த சட்ட நீடிப்பு நிறைவேற்றப்பட் டது. நேற்றைய பாராளுமன்றக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-4)

## அரசாங்கத்தினால் புதிய...

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றக் கூடாது, எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்களை இணைக் கக் கூடாது உட்பட பல கோரிக்கைகளை அர சாங்கம் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த விடுதலைப்புலி கள், அக் கோரிக்கைகளை வாபஸ் பொறு மாறு கோரியுள்ளதுடன்அதுவரையும் தமது பயணத்தை நிறுத்தவும் முடிபு செய்துள்ள னர்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இயல்பு நிலைமையும் நிராயுதபாணிகளான போராளிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படுமானால் தமது போராளிகள் அரசியல் பணிகளுக்காக ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்கு மீண்டும் செல்வர் என்று கடந்த மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களின்போது புலிகள் தெரிவித்தனர்.

அதன்படி யாழ்.மாவட்டம், திருகோண மலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு , அம்பாறை ஆகிய பகுதிகளில் உள்ள இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இன்று செல்வதற்கு விடுதலைப்புலிகள் தயாராகியி ருந்தனர்.

எனினும் அரசின் புதிய நிபந்தனைகளி னால் இப் பயணம் ரத்தாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. அரசியல் பணிக்காக யாழ்.மா வட்டத்திற்கு இன்று 35 போராளிகள் வருவ தற்கு ஏற்பாடாகியிருந்ததாக தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை அரசியல் போராளிகளின் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை அனுச ரணையாளர்களான நோர்வேத் தரப்பிடம் இருந்தும் கண்காணிப்புக் குழுவினரிடம் இருந்தும் விடுதலைப்புலிகள் பெற்றுள்ள தாகவும் கூறப்படுகின்றது. (ச-4)


இன்று முதல்
தினசரி நான்கு காட்சிகள்
தாங்கர் பச்சான், நவ்யாநாயர் நடித்த
சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி
யாழ்ப்பாணம் காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 22.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.